விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 15 வெள்ளிக்கிழமை (01.10.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 286

### சுமார் ஒன்றரை மாதங்களின் பின்

# நாடு இன்று வழமைக்கு

### இரவு நேர ஊரடங்கு தொடர்ந்தும் அமுல்

*(கொழும்பு)* சுமார் ஒன்றரை மாதங்களின் பின் நாடு வழமைக்குத் திரும்புகிறது. இன்று அதிகாலை 4 மணியுடன் நடைமுறையில் இருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்படுகிறது. (15ஆம் பக்கம் பார்க்க)

வடக்கில் மாவட்டங்களுக்கிடையில்

## இன்று முதல் வழமையான நேரத்தில் பஸ் சேவைகள்

(கொழும்பு)
இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பேருந்து சேவைகள் இன்று அதிகாலை தொடக்கம் வழமையான நேர அட்டவணையில் இடம்பெறும் என்று பிராந்திய பிரதான முகாமையாளர் 15

கோப்பாய் பிரதேச செயலக

## அபிவிருத்தி உத்தியோகத்தர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
காணாமல்போன அபிவிருத்தி உத்தியோகத்தர் கிணறொன்றில் இருந்து நேற்று மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் கோப்பாய் பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி 15



## நாட்டில் ஒரே நாளில் 59 பேர் பலி

(கொழும்பு)
கொரோனாவால் இலங்கையில் ஒரே நாளில் நேற்று 59 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 15

கொரோனா

## வவுனியாவில் மூவர் மரணம்

(வவுனியா)
வவுனியாவில் உயிரிழந்த பெண்கள் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
வவுனியாமாவட்ட 15

### புதிய சுகாதார வழிகாட்டல் வெளியீடு

# மாகாணங்களுக்கிடையில் பயணிக்க தொடர்ந்து தடை



- ஒவ்வொரு நாளும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணிவரை ஊரடங்கு.
- மேலதிக வகுப்புகளுக்குத் தடை.
- பதிவுத் திருமணங்களில் ஐவருக்கே அனுமதி.
- மரண வீட்டில் ஒரே தடவையில் 10 பேருக்கே அனுமதி.
- பொதுக்கூட்டங்கள், இசை நிகழ்ச்சிகள், மக்கள் சந்திப்புகளுக்கு அனுமதியில்லை.

கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கும் புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் இன்று ஒக்ரோபர் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் புதிய 15

## கோவிட் தொற்றுடன் உறவினர்களுடன் சுற்றுலா

### வவுனியாவில் சுகாதாரப் பிரிவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(வவுனியா)
வவுனியாவில் கோவிட் தொற்றுடன் தனிமைப்படுத்தப்பட்டிருந்த குடும்பம் ஒன்று உறவினர்களுடன் சுற்றுலா சென்றுள்ளதாக 15

## சுகாதார வழிகாட்டல்களை மறந்தால் மிக மோசமான விளைவு ஏற்படும்

### அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் எச்சரிக்கை

(கொழும்பு)
"கொரோனா வைரஸ் பரவல் தற்போது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மக்கள் சுகாதார வழிமுறைகளைத் தொடர்ந்தும் முறையாக பின்பற்ற வேண்டும். அவ்வாறு மக்கள் அதனைப் பின்பற்றாவிட்டால் மிக மோசமான விளைவுகளை மீண்டும் எதிர்கொள்ள நேரிடும்"
இவ்வாறு அரச 15

அச்சுவேலி தோப்புப் பகுதியில்

## வளர்ப்பு நாய் கடித்ததில் குடும்பஸ்தர் மரணம்



(யாழ்ப்பாணம்)
வளர்ப்பு நாய்க் கடிக்கிலக்காகிய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இதில் அச்சுவேலி தோப்புப் பகுதியைச் சேர்ந்த வைரமுத்து வசந்தராசா 15

புகைத்த பீடியை எறிந்தவர்

## தீக்காயங்களுக்குள்ளான நிலையில் உயிரிழப்பு

### அளவெட்டியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
தீக்காயங்களுக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இதில் அளவெட்டி மேற்கைச் சேர்ந்த 15

பருத்தித்துறையில்

## 38 நாள் சிசு உயிரிழப்பு

(கரணவாய்)
பருத்தித்துறையில் நிமோனியா காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 38 நாள் சிசு ஒன்று உயிரிழந்துள்ளது.
கரவெட்டியைச் 15

## வடக்கில் 24 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 9 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 24 பேர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவற்றின் அடிப்படையில், யாழ். மாவட்டத்தில் 9 பேர், வவுனியா மாவட்டத்தில் 6 பேர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பேர், மன்னார் மாவட்டத்தில் 3 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## நாட்டில் நேற்று மேலும் 912 பேருக்கு கொரோனா


கொரோனா தொற்று உறுதியான மேலும் 912 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 517,377 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 46,983 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சைபெற்று வருகின்றனர். (ம-03)

## நாகர் கோவில் கிழக்கில் இரு எறிகணைகள் மீட்பு



நாகர்கோவில் கிழக்கு முருகமூர்த்தி ஆலயத்திற்கு அருகாமையில் இருந்து 81 மில்லிமீற்றர் ரக மோட்டார் எறிகணைகள் இரண்டு நேற்று வியாழக்கிழமை மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

மோட்டார் குண்டுகள் காணப்பட்டமை தொடர்பில் பொதுமக்களால் பருத்தித்துறை பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் அவை மீட்கப்பட்டு பருத்தித்துறை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விசேட அதிரடிப் படையினர் மோட்டார் குண்டுகளை செயலிழக்கச் செய்தனர். குறித்த பகுதி யுத்த காலத்தில் முன்னரங்காகக் காணப்பட்ட களமுனைப் பகுதி என்பது குறிப்பிடத்தக்கது.(ம-03,60)

## வாழ்த்துகின்றோம்



யா / கெருடாவில் இ.த.க. பாடசாலையில்
அதிபராக 9 ஆண்டுகள் சிறப்பாக
சேவையாற்றி இன்று (01.10.2021)
வெள்ளிக்கிழமை
யா / தொண்டைமானாறு
வீரகத்திப்பிள்ளை
மகா வித்தியாலயத்தின்
அதிபராகக் கடமையேற்கும்


**உயர்திரு.**
**கணேஸ் உதயரூபன்**
SLPS - I
[ B.Com, Dip - in - Ed., M.Ed. (Merit) ]

அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதோடு கல்விப்புலத்தில்
அவரின் அதிபர் பணி மேன்மேலும்
சிறக்க வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா / கெருடாவில் இ.த.க. பாடசாலை,**
**தொண்டைமானாறு.**

(C-2719)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக்
கடமையாற்றும் செல்வி **பா. அகல்யா**
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
**பொன்னன் பாலசிங்கம்**
அவர்கள் கடந்த 27.09.2021 (திங்கட்கிழமை) அன்று
இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இழப்பால்
துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்
பிரான்சிஸ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**தியாகராசா நாகராசா**

அன்போடும் பண்போடும் சேவை ஆற்றி
ஆலயத் திருப்பணிகள் பலவும் செய்தே
என்புருகும் பக்தியால் பர்வத வத்தினி
எழிலோடு பசுபதீஸ் வரனைப் போற்றி
நன்மையுறு நான்கு கும்பாபிஷேகம் செய்து
நல்லுறவை தொண்டருடன் பேணி நின்ற
அன்பரவர் அவன்தாளில் பேறு பெற்றார்
ஆத்மா சாந்தியுற பணிகின்றோமே!

**பர்வதவத்தினி சமேத**
**பசுபதீஸ்வரர் ஆலய வழிபடுநர் சபை,**
**பருத்தித்துறை.**

(C 2717)

**H.A.C**

வலி. மேற்கின் முன்னணி நிறுவனம்

zoom

**சித்தன்கேணி**
**A/L - 2023**

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பம்.

**02.10.2021 சனிக்கிழமை**
**பி.ப 3.00 மணி**

(C-2721)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**பொன்னம்பலம் நந்தகுமார்**

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்

எமது தந்தையின் மரணச் செய்தி அறிந்து
நேரில் வந்து உதவிபுரிந்தோருக்கும்
தொலைவிலிருந்து ஆறுதல் கூறிய அனைத்து
அன்பு உள்ளங்களுக்கும் இதய பூர்வமான
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மண்ணில் : 28.02.1951**
**விண்ணில் : 01.09.2021**

இல. 24, அருளகம்,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

நன்றியுடன்
குடும்பத்தினர்

## இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியா- இலங்கைக்கு இடையிலான உறவில் ஏற்பட்டுள்ள அழுத்தங்களுக்கு மத்தியில் குறித்த விஜயம் அமைய உள்ளதுடன், நாளை முதல் 5ஆம் திகதி வரை ஹர்ஷ வர்தன் ஷ்ரிங்லா இலங்கையில் தங்கிருப்பார் எனவும் இந்திய ஊடகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (நி-5)

## மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்துமாறு தேர்தல் ஆணைக்குழு கோரிக்கை

(கொழும்பு)

**தேவையான சட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டு மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.**

தேர்தல் சட்ட திருத்தங்கள் தொடர்பிலான பாராளுமன்ற விசேட செயற்குழுவிற்கு அழைக்கப்பட்ட போதே, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் இதனை தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகள் இன்றி மாகாண சபைகளை நடத்திச்செல்வது ஏற்புடையதல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் செலவுகளைக் கட்டுப்படுத்துதல், தெரிவு செய்யப்பட்ட தொகுதிகளில் முன்கூட்டியே வாக்களிக்கின்றமைக்கு சந்தர்ப்பமளித்தல் மற்றும் சிறப்பு வாக்குச்சாவடிகளை நிறுவுதல் ஆகியன தொடர்பில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், பாராளுமன்ற விசேட செயற்குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

09 மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்து 03 வருடங்கள் கடந்துள்ளதுடன், அனைத்து மாகாண சபைகளும் ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன.

இந்த மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவது தொடர்பாக பரிந்துரையை வழங்குமாறு சட்டமா அதிபரிடம் தேர்தல் சட்ட திருத்தங்கள் தொடர்பிலான பாராளுமன்ற விசேட செயற்குழு அண்மையில் கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## வெள்ளைச்சீனி இறக்குமதிக்கு அனுமதி

(கொழும்பு)

வெள்ளை சீனியை இறக்குமதி செய்ய நேற்று முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஆணையாளர் நாயகம் தமயந்தி கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இதற்காக கேள்வி கோரல்களை திறக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். (நி-5)

## 2022 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் அடுத்த வாரம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

2022 நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் அடுத்த வாரம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற விசேட குழுவின் கூட்டம் அதன் தலைவர் சபை முதல்வர், அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நேற்றுக் காலை பாராளுமன்றத்தில் கூடியது.

இதன்போதே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

## சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடி காலம் நீடிப்பு

(கொழும்பு)

காலாவதியான சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடி காலம் நீடிக்கப்பட்டு, வர்த்தமானி அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவிப்பில் போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கையெழுத்திட்டுள்ளார்.

அதன்படி கடந்த ஏப்ரல் 1 முதல் செப்டெம்பர் 30 வரை காலாவதியாகும் சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடி காலம் குறித்த திகதியிலிருந்து 12 மாதங்கள் நீடிக்கப்படும்.

இன்று காலாவதியாகும் சாரதி அனுமதிப் பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் அடுத்த ஆண்டு மார்ச் 22 வரை தொடர்புடைய திகதியிலிருந்து 06 மாதங்கள் நீடிக்கப்படும் எனவும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (நி-5)

## சுகாதார வழிமுறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்

### பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

(கொழும்பு)

கொவிட் வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலைமைக்கு மத்தியிலேயே இன்று நாடு திறக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றிக்கொண்டாலும் நாம் நூறு வீதம் பாதுகாப்பாக உள்ளோம் என கருத முடியாது.

எனவே சுகாதார வழிமுறைகளை சகல தரப்பும் பின் பற்றுவது அவசியமானதாகும் என பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்து புதிய வைரஸ் தொற்றுகளை நாட்டுக்குள் கொண்டுவராது சுற்றுலாத்துறையை முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



கொவிட் வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலைமையை அடுத்து கடந்த நாற்பத்து இரண்டு நாட்களாக நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் இன்று அதிகாலை நான்கு மணியுடன் தனிமைப்படுத்தல் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ள நிலையில், நாட்டின் பொதுச் சுகாதார செயற்பாடுகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். (நி-5)

## ரத்வத்தைக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தையின் அநுராதபுர சிறை அச்சுறுத்தல் சம்பவம் தொடர்பில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள எட்டு தமிழ் அரசியல் கைதிகளினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ சுமந்திரனும் சட்டத்தரணி கேசவன் சயந்தனும் ஆஜராகவுள்ளனர். (நி-5)



## மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள நடவடிக்கைகள் வழமைக்கு

(கொழும்பு)

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நாரஹேன்பிட்டி மற்றும் வெரஹெர அலுவலகங்களின் நடவடிக்கைகள் இன்று முதல் வழமைக்கு திரும்புகிறது என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த அலுவலகங்கள் ஊடாக சேவையை பெற எதிர்பார்ப்பவர்கள் தமக்கான திகதியையும் நேரத்தையும் முன்பதிவு செய்து கொள்ள 011-2677-877 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அத்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி-5)

## 5 நாட்களுக்கு பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் வாரத்தில் 5 நாட்கள் தொடர்ந்து பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்சித் தலைவர்களுக்கு இடையிலான கலந்துரையாடலின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதனடிப்படையில் 4 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரையில் இவ்வாறு பாராளுமன்றம் கூடவுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. (நி-5)

## ராஜஸ்தானை வீழ்த்தி
# வலுவான நிலையில் பெங்களூர்



ராஜஸ்தான் அணிக்கு எதிரான நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியில் பெங்களூர் அணி 7 விக்கெட்டுகளினால் வெற்றிபெற்றுள்ளது.

2021 இந்தியன் பிரீமியர் லீக்கின் 43 ஆவது போட்டி சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் ரோயலுக்கும், விராட் கோலி தலைமையிலான ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர்வுக்கும் இடையில் ஆரம்பமானது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பினை ராஜஸ்தானுக்கு வழங்கியது.

எவன் லூயிஸ் மற்றும் ஜெய்ஸ்வால் ஆகியோரின் பலமான ஆரம்ப இணைப்பாட்டத்துடன், ரன் வேட்டையை ஆரம்பித்த ராஜஸ்தான் 8 ஓவர்களின் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 71 ஓட்டங்களை பெற்றது.

பின்னர் ஒன்பதாவது ஓவரின் இரண்டாவது பந்து வீச்சில் ஜெய்ஸ்வால் 31 ஓட்டங்களுடன் கிறிஸ்டியனின் பந்து வீச்சில் சிராஜ்ஜிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

தொடர்ந்துராஜஸ்தான் அணித் தலைவரும் அதிரடி ஆட்டக்காரருமான சஞ்சு சம்சனுடன் கைகோர்த்த லூயிஸ்ம் சற்று நேரம் நின்று நிலைத்தாடி அரைசதம் பெற்றார்.

இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்து 149 ஓட்டங்களை மாத்திரமே அவர்களால் பெற முடிந்தது.

150 என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி 17.1 ஓவரில் மூன்று விக்கெட்டினை இழந்து 153 ஓட்டங்களை பெற்று வெற்றியிலக்கை கடந்தது.

பெங்களூர் சார்பில் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய தேவதூத் படிக்கல் 22 ஓட்டங்களுடனும், விராட் கோலி 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க மூன்றாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய ஸ்ரீகர் பாரத் 44 ஓட்டங்களை வெற்று ஆட்டமிழந்தார்.

மெக்ஸ்வேல் மொத்தமாக 30 பந்துகளில் ஒரு சிக்ஸர், 6 பவுண்டரிகள் அடங்கலாக 50 ஓட்டங்களுடனும், ஏ.பிடி. வில்லியர்ஸ் நான்கு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

இதனிடையே தனது இருபது-20 கிரிக்கெட் அரங்கில் மெக்ஸ்வெல் 7 ஆயிரம் ஓட்டங்களை 16.1 ஆவது ஓவரில் மெக்ஸ்வெல் கடந்தமை விசேட அம்சமாகும். (4-6)

# அதிக விக்கெட்டுக்களை சாய்த்த ஹர்ஷல்



சர்வதேச போட்டியில் விளையாடாத ஒருவர் ஐ.பி.எல்.லில் அதிக விக்கெட் சாய்த்தவர் என்ற பெருமையை வங்களூர் அணி வீரர் ஹர்ஷல் படேல் பெற்றுள்ளார்.

வங்களூர் அணியின் வேகப் பந்து வீரர் ஹர்ஷல் படேல் 26 விக்கெட்டை எடுத்து தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளார். 11 ஆட்டத்தில் அவர் 26 விக்கெட் எடுத்துள்ளார். இதன்மூலம் ஹர்ஷல் படேல் ஐ.பி.எல். போட்டியில் புதிய சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்பு 2015 ஆம் ஆண்டு ஐ.பி.எல். போட்டியில் இதே பெங்களூர் அணியை சேர்ந்த யசுவேந்திர சாகல் 23 விக்கெட் கைப்பற்றி இருந்தார். அதை ஹர்ஷல் படேல் முறியடித்தார்.

ஒரு சீசனில் அதிக விக்கெட்டை கைப்பற்றிய வீரராக பிராவோ உள்ளார். சென்னை சூப்பர் கிங்ஸ் வீரரான அவர் 2013 ஐ.பிஎல்.லில் 32 விக்கெட் கைப்பற்றினார். அவரது சாதனையை நோக்கி ஹர்ஷல் படேல் செல்கிறார். (4-6)

## இன்றைய போட்டி

vivo IPL

PUNJAB KINGS VS Kolkata Knight Riders

# ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2417

**வாரணன்**

நல்ல செருப்புங்க, 300 ரூபாய் இருக்கும்... உள்ளே போகும்போது இருந்தது... வெளியே வந்து பார்த்தா காணோம்...



சரி என்று என்ர செருப்பையே போட்டுக் கொண்டு வந்திட்டன்...

**நிரோ**




**ஜானியா**

இல்லாதவனுக்கு எது கிடைத்தாலும் அது அதிசயம்...!!



இருப்பவனுக்கு எது கிடைத்தாலும் அது அலட்சியம்...!!

**விஜய்**

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் இன்று 1 ஆம் திகதி நீக்கப்படும்



அப்போ இவ்வளவு நாளும் லொக்டவுன்லயா இருக்கோம்...

**சாந்தி**

அன்று கூடி வாழ்ந்தால் கோடி நன்மை இன்று கூடி வாழ்ந்தால் கொரோனாவுக்கே நன்மை



அன்று ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு இன்று ஒன்றுபட்டால் உண்டு சாவு

**பவி**

பர்மாவிலிருந்து 4 நாட்கள் தாய், தந்தையை சுமந்து கொண்டு பங்களாதேஷ் வரை நடந்து வந்த இந்த மனிதரை என்னவென்று சொல்வது.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இராசிபலன்

01.10.2021
புரட்டாதி 15, வெள்ளிக்கிழமை
தசமி முன்னிரவு 8.23 மணிவரை
பூசம் பின்னிரவு 1.20 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32- 12.02 மணிவரை
சந்திராஷ்டமம்-மூலம், பூராடம்

வளவன்

**மேஷம்** — வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**ரிஷபம்** — தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வழிபாடு குதூகலம் தரும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** — குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** — கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்** — தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், திடீர் பயணமொன்று ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

**கன்னி** — வருங்கால நலன்கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**துலாம்** — உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்** — சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், கௌரவம் கூடும் நாள்.

**தனுசு** — கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்பப் பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வழிபாட்டால் மகத்துவம் கூடும்.

**மகரம்** — நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கிச் செல்லும் எண்ணம் உருவாகும், நண்பர்களால் வளர்ச்சி கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்** — மறைமுகப் போட்டிகள் மாறும், பொல்லாதவர் உங்களை விட்டு விலகுவர், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் கூடும்.

**மீனம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபடவேண்டிய நாள், பிள்ளைகளால் பெருமை காண்பீர்கள்.

பகையை அன்பினால் வெல்லுங்கள்,
கோபங்களை ஊக்கத்தால் வெல்லுங்கள்

# பழிவாங்கும் செயற்பாடுகளை உடன் முடிவுக்கு கொண்டுவரவும்

## மனித உரிமைகள் ஆணையாளர்

(கொழும்பு)

ஐ.நா.பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ், இலங்கை உட்பட 45 நாடுகளிலுள்ள சுமார் 240 சிவில் சமூக உறுப்பினர்கள், ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான பழி வாங்கும் செயற்பாடுகள் மற்றும் மிரட்டல் குற்றச்சாட்டுகளை ஆவணப்படுத்தியுள்ளார்.

இந்த சம்பவங்களை ஆவணப்படுத்தும் அறிக்கை, ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஐ.நா. மனித உரி மைகளுக்கான உதவி பொதுச் செயலாளர் ஜல்ஸ் பிராண்ட்ஸ் கெஹ்ரிஸால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

இலங்கை குறித்து மனித உரிமைகள் ஆணையாளர், தனது பெப்ரவரி 9, 2021 இல் மனித உரிமைகள் சபைக்கு அளித்த அறிக்கையில், "சிவில் சமூக அமைப்புகள், மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் மீது தீவிர கண் காணிப்பு மற்றும் துன்புறுத்தல் போன்ற ஒரு முறைமை இருப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை இந்த நிலைமை குடிமை மற்றும் ஜனநாயக இடத்தில் ஒரு குளிர் விளைவை உருவாக்குகிறது மற்றும் சுய தணிக்கைக்கு வழிவகுக்கிறது என உயர் ஆணையாளர் கவலை வெளியிட்டுள்ளார்.

ஆகவே அரசு முகவர்களின் மிரட்டல் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்களுக்கு எதிரான துன்புறுத்தல் உள்ளிட்ட அனைத்து வகையான கண்காணிப்புகளையும் உடனடியாக முடிவுக்கு கொண்டு வருமாறு அதிகாரிகளை மனித உரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தினார். (நி-5)


## எதிர்வரும் க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான விசேட இடர்கால செயற்றிட்டம்-2021

**Covid 19** தொற்றுக் காரணமாகப் பாதிக்கப்பட்ட எமது மாணவர்களின் கல்வி நிலையைக் கருத்தில் கொண்டு மாணவர்களுக்கான விசேட செயற்றிட்டம் ஒன்றினை ஆறுதல் நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது. க.பொ.த (சா/த) 2021 மாணவர்களுக்கு ஆறுதல் நிறுவனத்தினுடைய **www.aaruthal.lk** இணையத்தளத்தில் பிரதான பாடங்களின் மாதிரி வினாத்தாள்களும் புள்ளித்திட்டமும் இலவசமாக 06.10.2021 ஆம் திகதி முதல் பதிவேற்றப்படவுள்ளன. அதனை மாணவர்கள் பெற்று பயன் பெறுவதற்கு அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் வழிகாட்ட வேண்டும் என எதிர்பார்க்கின்றேன். நாட்டின் தற்போதைய சூழ்நிலைகள் சீரானதும் ஆறுதல் நிறுவனத்தின் கற்றல் ஊக்கிகள் மாணவர்களுக்குக் கிடைப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

திரு.சுந்தரம் டிவகலால,
பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர்,
ஆறுதல். (C-2715)



## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக நண்பர்

அமரர்
திரு. வ. வர்ண இராமேஸ்வரன்



அவர்களின்
மறைவுச் செய்தி
கேட்டு ஆழ்ந்த
துயரடைவதுடன்
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய
எல்லாம்
வல்ல
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

89/90 யாழ். பல்கலைக்கழக
கலைப்பீட நண்பர்கள்.

[C-2713]

# ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டாலும்

# மக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது அவசியம்

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

**ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் நிலையில், பொதுமக்கள் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளை மீறி ஒன்றுகூடினால், தொற்றாளர்களின் எண்ணிக்கையும் இறப்புகளின் எண்ணிக்கையும் மேலும் அதிகரிக்க கூடிய வாய்ப்புகள் உள்ளது என, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

அத்துடன், தடுப்பூசி பெற்றவர்களாக இருந்தாலும், சுகாதார நடைமுறைகளை தொடர்ச்சியாக பின்பற்றுவது அவசியமாகும் எனவும், அவர் கூறினார். யாழ்ப்பாணத்தில், நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் வடக்கு மாகாணத்தில், தற்போது வரை 36 ஆயிரத்து 356 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் இறப்புகளை பார்த்தால் வடக்கு மாகாணத்தில் 753 இழப்புகள் ஏற்பட்டுள்ளன எனவும் கூறினார்.

மேலும் ஓகஸ்ட் மாதத்தில் மாத்திரம் 208 இறப்புகள் பதிவாகியுள்ளன எனத் தெரிவித்த அவர், ஏனைய மாவட்டங்களை போல வடக்கு மாகாணத்தில் ஓகஸ்ட் மாதம் தொடக்கம் செப்டெம்பர் வரை இறப்புகளும் நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் காணப்பட்டது எனவும் கூறினார்.

இந்தக் காலப்பகுதியில், இறந்தவர்களின் சடலங்களை தகனம் செய்வற்கு இடர்நிலை காணப்பட்டது "இந்தக் காலப் பகுதியில் 101சடலங்களை மின் தகனத்துக்காக வெளிமாவட்டத்துக்கு அனுப்பியிருந்தோம் தற்போது அந்த நிலை மாறியுள்ளது. செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கையிலும் இறப்புக்கள் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டது "நாடு முழுவதிலும் பொதுவாக குறைந்துள்ளது. தற்போது வடமாகாணத்தில் இந்தச் சடலங்களை தகனம் செய்ய கூடியதாக நிலை காணப்படுகின்றது. எனினும், தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நீக்கப்படவுள்ளது.

"எனவே, பொதுமக்கள் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை மீறி ஒன்றுகூடினால், தொற்றாளர்களின் எண்ணிக்கையும் இறப்புகளின் எண்ணிக்கையும் மேலும் அதிகரிக்க கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன." இந்த நோய்த் தொற்றானது பூரணமான கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை, இந்த நடைமுறையை தொடர்ந்து செயற்படுத்துவது சிறந்தது" எனவும், அவர் தெரிவித்தார்.(4-7-33-18)

## புனரமைப்பு விடயங்களில்

# நகரசபை தீர்மானிப்பதையே

## ஒப்பந்தகாரர்கள் செயற்படுத்த வேண்டும்

(சாவகச்சேரி)

வீதிபுனரமைப்பு விடயத்தில் நகரசபை கண்டிப்பாக இருக்க வேண்டுமென சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார். அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், வீதிபுனரமைப்பு விடயங்களை ஒப்பந்தகாரர்கள் தீர்மானிக்க கூடாது. நகரசபை தீர்மானிப்பதனை ஒப்பந்தகாரர்கள் செயற்படுத்த வேண்டும். மக்கள் வரிப்பணத்தில் செய்யும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முறையாகச் செய்ய வேண்டும். வேலைத்திட்டங்களை ஒப்பந்தம் எடுக்கும் ஒப்பந்தகாரர்கள் தாம் நினைத்தவாறு வீதிஅமைப்பதாக இருக்கக்கூடாது. அத்துடன் நகரசபை எல்லைக்குள் எந்த அபிவிருத்தித் திட்டம் இடம்பெறுவதாக இருந்தாலும் அந்த நகரசபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். அவ்வாறு நகரசபையின் அபிப்பிராயம் பெறாத அபிவிருத்திகளை நாங்கள் ஏற்கமாட்டோம். என மேலும் அவர் தெரிவித்தார். (4-7-30)

# அருளாசியுரையும்

# வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் நீர்வேலி மாசுவான் மேற்கு அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ குக. பாலகிருஸ்ணசர்மா, பிரம்ம ஸ்ரீ சா.கோபாலசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-7)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வடமராட்சி, பருத்தித்துறை - கொடிகாமம் தனியார் பஸ் சேவைச் சங்கம் சார்ந்த - சாரதி, நடத்துனர்களின் 35 குடும்பங்களுக்கு அத்தியவசியமான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

(படம் : மகாலிங்கம்)

# வன்முறைச்சம்பவங்கள் தொடர்பில்

# முறைப்பாடு வழங்க தொ.இல அறிமுகம்

(குப்பிழான்)

வடமாகாணத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் கவலையளிப்பதாகவும், இவற்றைக் கட்டுப்படுத்துவதற்குப் பொதுமக்கள் தங்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

மெய்நிகர் வழியாக நேற்று முன்தினம் புதன்கிழமை ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது வடமாகாண ஆளுநரிடம் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள வன்செயல்கள் தொடர்பாக கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,வடக்கில் தற்போதைய சூழலில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்கள்



கவலை தரும் விடயமாக உள்ளது. இதனை அனுமதிக்க முடியாது. இதனைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடி வருகின்றேன்.

அதுமட்டுமன்றி வடக்கில் இடம்பெற்று வரும் சம்பங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காக மூவரை நியமனம் செய்துள்ளேன். அவர்கள் தொலைபேசி இலக்கங்களுக்கு எந்நேரமும் தொடர்புகளை எற்படுத்திமுறைப்பாடுகளை வழங்கலாம். இதன் மூலம் கிடைக்கும் முறைப்பாடுகளுக்கு ஏற்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மாகாணத்தில் உள்ள பொதுமக்கள் தமக்கு ஏதேனும் பாதுகாப்புப் பிரச்சினைகள் தொடர்பில் அச்சம் ஏற்பட்டால் எனது இணைப்புச் செயலாளர் மற்றும் பிரத்தியேகச் செயலாளரைத் தொடர்பு கொள்ள முடியும். பொதுமக்கள் தமது பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்காக எனது இணைப்புச் செயலாளரது தொலைபேசி இலக்கமான 0777229338 அல்லது பிரத்தியேக செயலாளர் இலக்கமான 0768095139 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-7-18)

# உடற்கல்வி ஆசிரியர், பயிற்றுனர்களுக்கு

# அனுமதி அட்டை வழங்க ஒப்புதல்

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் கோரிக்கைக்கு அமைய இலங்கை உதைபந்தாட்ட சங்கம் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர் ஊடாக வடக்கு மாகாணத்தில் உள்ள உதைபந்தாட்டத்தில் தம்மை அர்ப்பணித்து செயற்படும் பாடசாலைகளில் கடமையாற்றும் உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுனர்களுக்கு அனுமதி அட்டை (லைசன்ஸ்) வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளது.

எனவே இதுவரையில் உதைபந்தாட்டத்தில் D லைசன்ஸ் எடுக்கவில்லை எனில் உங்கள் பெயரையும் பாடசாலையின் பெயரையும் சங்கத்தின் பொருளாளருடன் உடன் தொடர்வு கொண்டு பதிவினை மேற்கொள்ளுமாறு உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் கேட்டுள்ளார்.

மேலும் உதைபந்து விளையாட்டில் லைசன்ஸ் C B உள்ளவர்களும் தமது பெயரினை பதியுமாறும் தெரிவித்துள்ளார்.(4-7)

# நிகழ்நிலைக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தியடிகளின் 152 ஆவது ஜெயந்தி தினத்தையும் சர்வதேச அகிம்சை தினத்தையும் முன்னிட்டு அகில இலங்கை காந்தி சேவா சங்கமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல் துறையும் இணைந்து நடத்துகின்ற சூம் செயலி ஊடான நிகழ்நிலைக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை மாலை 7 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ந.சிவகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் செஞ்சொற் செல்வர் காலநிதி ஆறு திருமுருகன் "மகாத்மா காந்தியடிகளின் யாழ்ப்பாண விஜயமும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களும்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழி வாற்றவுள்ளார். மேலும் இந் நிகழ்வில் கலந்து கொள்வ தற்கான Meeting ID - 254 38 18884, Passcode - Peace @ 2021 ஆகும். (4-7)

# மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு நீடிக்கப்பட வேண்டும்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு) மாகாணங்களுக்கிடையிலான பயணக்கட்டுப்பாடு இன்னும் சிறிது காலம் நீடிக்கப்பட வேண்டும் இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நாட்டில் தற்போது அமுலிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு இன்று காலை நீக்கப்படும் நிலையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், சிகை அலங்கார நிலையங்கள், மதுபான விற்பனை நிலையங்கள், இரவு விடுதிகள் ஆகியன ஒரு மாதத்துக்குப் பின்னரே திறக்கப்பட வேண்டும் எனவும் வைத்திய அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, மாகாணங்களுக்கிடையில் இன்னும் இரு வாரங்களுக்கு ரயில் மற்றும் பேருந்து சேவைகள் முன்னெடுக்கப்படாது எனவும், மாகாணத்துக்குள் தான் சேவைகள் இடம்பெறும் எனவும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5)




ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

அருள்மிகு
காளி அம்பாள் தேவஸ்தானம்
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்

கேதாரகௌரி விரதம்

அம்பிகை அடியார்களே!

நிகழும் பிலவ வருடம் புரட்டாதி திங்கள் 29 ஆம் நாள் (15.10.2021) வெள்ளிக்கிழமை முதல் கௌரி விரதம் ஆரம்பமாகவிருப்பதால் விரதகாரர்கள் தங்கள் பெயர், நட்சத்திரங்களைப் பதிவு செய்து கொள்ளலாமென்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கோவில் திறந்திருக்கும் நேரம்**
காலை 6.00 மணி முதல் 9.00 மணிவரை
மதியம் 11.30 மணி முதல் 12.30 மணிவரை
மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை
**வெள்ளி, செவ்வாய்**
காலை 6.00 மணி முதல் 12.30 மணிவரை

தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள் (8006)

## அறிவித்தல்

## வலி. தென்மேற்கு பிரதேச சபை

### மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை

**வட்டாரம் :- 08**
**ஆதன இலக்கம்: 55**
**வட்டுக்கோட்டை வீதி3ம் ஒழுங்கை**

வட்டாரம் :- 08, வட்டுக்கோட்டை வீதி 3ம் ஒழுங்கை, ஆதன இலக்கம் 55 இல் அமைந்துள்ள உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று ஆனைக்கோட்டை இறை **"நாவலடி"** என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நெற்பரப்பு 1 1/2 கொண்ட இவ்வாதனமானது ஒட்டுவெளி மிருசுவிலைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுதாகரனும் பெண் நந்தினியும் ஆகிய இவர்களால் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த புவிராசா காஞ்சநாதனும் பெண் வரதலட்சுமியும் இவர்களுக்கு பிரசித்த நொத்தாரிஸ் திருமதி அபர்ணா ஜனார்த்தன் முகதாவில் நிறைவேறிய 1082 ஆம் இலக்க 2020.01.20 ஆம் திகதிய அறுதி உறுதிமூலம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் எனத்தெரியப்படுத்திஎமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். இவ்வாதனத்தின் தாயுறுதியானது பிரசித்த நொத்தாரிசு திரு. எம்.தியாகராஜா முகதாவில் நிறைவேறிய 3615ம் இலக்க 1999.12.12ம் திகதிய அறுதி உறுதியின் மூலம் செல்வி பிறேமிலா இலங்கேஸ்வரனுக்கு வந்தடைந்ததாகும்.

நில அளவையாளர் திரு.A.அருள்நேசன் அவர்களால் வரையப்பட்ட **3048B**ம் இலக்க 2018.02.21ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் **"நாவலடி"** நெற்பரப்பு 1 1/2 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து புவிராசா காஞ்சநாதனும் பெண் வரதலட்சுமிஎன்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை (மானிப்பாய்) பொறுப்பாளி ஆகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(8072)

தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

## பதவி வெற்றிடம்

1. முகாமையாளர்- ஆண், பெண்
   - தகைமை: க.பொ.த. (உ/த) வுக்குக் குறையாது. தேக ஆரோக்கியமுள்ள ஓய்வு பெற்ற அதிபர்/ ஆசிரியர்/ நிர்வாகிகள் பொருத்தமாயிருப்பர்.
   - வயதெல்லை: 40-65 வருடங்கள்
2. உளவளத்துணையாளர்(முழுநேரம்/ பகுதிநேரம்) ஆண்/ பெண்
   - தகைமை: உளவளத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் பெற்றவர்
   - வயதெல்லை: 40-65 வருடங்கள்
3. உப விடுதிக் காப்பாளர்- ஆண்/ பெண்
   - தகைமை: க.பொ.த. (உ/த)வுக்குக் குறையாத கல்வித் தகைமை
   - ITயில் தேர்ச்சி மேலதிக தகைமையாகக் கருதப்படும்
   - உணவும் தங்குமிட வசதியும் இலவசம்
   - வயதெல்லை: 25- 50 வருடங்கள்
   - 6 மாத தகுதிகாண் காலம் நிறைவு செய்த பின் EPF, ETF இணைப்பு

❖எல்லா பதவிகளுக்கும் சம்பளம் பேசி நிர்ணயிக்கப்படும்.

விண்ணப்பங்கள் 07.10.2021 வரை ஏற்றுக்கொள்ளப்படும். **சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(C-2716)

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

லோ.துஷிகரன்
செயலாளர்.

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:

தொலைபேசி:
076 097 3127
021 221 7603

Viber: 076 636 3378

E.mail:
valampurii@yahoo.com

# புதிய ஏவுகணையை சோதித்த வடகொரியா; எச்சரித்த அமெரிக்கா

(பியாங்யாங்)

**நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அணு ஆயுத பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க வடகொரியாவுக்கு அமெரிக்கா மற்றும் தென்கொரியா அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், வடகொரியோவோ அதனைப்பொருட்படுத்தாமல் தனது இராணுவத் திறன்களை தொடர்ந்து விரிவுபடுத்திக் கொண்டே செல்கிறது.**

இதனையடுத்து வடகொரியா நேற்று முன்தினம் மீண்டுமொரு ஏவுகணையைச் சோதித்தது. ஒலியை விட வேகமாக செல்லும் ஹைப்பர் சோனிக் ஏவுகணை வெற்றிகரமாக சோதித்ததாக அறிவித்துள்ளது.

ஹவாசாங்-8 என்று அழைக்கப்படும் இந்த ஏவுகணை அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் படைத்தது என்றும் சோதனையின் போது ஏவுகணை இலக்கை துல்லியமாக தாக்கிஅழித்ததாகவும் வடகொரியாவின் அரச ஊடகமான கேசிஎன்.ஏ. தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கே.சி.என்.ஏ. வெளியிட்டுள்ள அறிக்கையில் “இந்த புதிய ஏவுகணை வடகொரியாவின் 5 ஆண்டு இராணுவ மேம்பாட்டு திட்டத்தில் வகுக்கப்பட்ட மிக முக்கியமான புதிய ஆயுத அமைப்புகளில் ஒன்றாகும். இந்த ஆயுத அமைப்பின் வளர்ச்சி எல்லா வகையிலும் தற்காப்புக்கான தேசத்தின் திறன்களை அதிகரித்துள்ளது” எனக்கூறப்பட்டுள்ளது.

இதனிடையே வடகொரியாவின் இந்த ஏவுகணை சோதனைக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித்தொடர்பாளர் நெட்பிரைஸ் கூறுகையில் “பிராந்தியம்மற்றும்சர்வதேசசமூகத்தின் அமைதியை சீர் குலைக்கும்சட்ட விரோதஏவுகணைசோதனையை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்” என்றார். (7-4)

# இருளில் மூழ்கியது சீனா!

(பீஜிங்)

சீனாவில் நிலக்கரி இறக்குமதியில் ஏற்பட்ட சரிவு காரணமாக அங்கு கடுமையான மின்வெட்டு ஏற்பட்டு வருகிறது.இதனால் சீனாவில் உள்ள சுமார் 20 மாகாணங்கள் இருளில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக பீக்ஹவர்ஸ் எனப்படும் அதிகம் பேர் அதிகமாக மின் சாதனங்களை பயன்படுத்தும் நேரங்களில் மின் வெட்டு அதிகமாக அமுல்படுத்தப்படுகிறது.

அதன்படி ஒரு நாளைக்கு 8 முறைஎன்கிறவகையில் தொடர்ச்சியாக 4 நாட்கள் மின்சாரம் துண்டிக்கப்படுவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இந்த மின்வெட்டால் பல்வேறு மாகாணங்களில் சிறு, குறு, கனரக தொழிற்சாலைகள் என அனைத்துமேவெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் உற்பத்தி தடைப்பட்டு வெளிநாட்டு ஏற்றுமதிபாதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனாவின் மின்வெட்டு சர்வதேச பிரச்சினையாக மாறிவருவதாகவும், இதே நிலை இன்னும் சில நாட்களுக்கு நீடித்தால் சீனப் பொருளாதாரத்தில்நேரடித்தாக்கம் ஏற்படும் என்றும் உலக அளவிலான முதலீட்டு வங்கிமற்றும் பத்திரங்கள் நிறுவனமான கோல்ட்மேன் சாக்ஸ் நிறுவனம் எச்சரித்துள்ளது. (7-4)

# மக்கள் துன்பப்படும் போது கும்மாளமிடும் தலிபான்கள் ரொக்கெட் லாஞ்சர்களுடன் படகுச்சவாரி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் மக்கள் உணவுக்கும் குடிநீருக்கும் ஏங்கி வரும் நிலையில் ஆட்சியை பிடித்த தலிபான்கள் பொழுது போக்கு பூங்காவில் பொழுதை போக்கிவருகின்றனர். ஏ.கே 47, எம் 4 மற்றும் ரொக்கெட் லாஞ்சர்களுடன் ஏரியில் படகு சவாரிசெய்தும் இராட்டினங்களில் சுற்றியும் பொழுதைக்கழிக்கின்றனர்.



ஆப்கானிஸ்தானின் வங்கி ஒன்றின் தலைவர், தமது நாட்டின் வங்கி அமைப்பு முறையே தகர்ந்து போகும் நிலையில் இருக்கிறது எனக் கூறியுள்ளார். கடந்த ஓகஸ்ட் மாதம் தலிபான்கள் ஆப்கானிஸ்தானின் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு முன்பே அந்நாட்டின்பொருளாதார சூழல் மோசமாகத் தான் இருந்தது.

மக்கள் தங்கள் வேலைகளை இழந்து, கையில் பணமின்றி தவிக்கிறார்கள். மேலும் ஆப்கானிஸ்தானில் வெறும் 5 சதவீத குடும்பங்களிடம் மட்டுமே தினமும் சாப்பிடும் அளவுக்கு உணவு இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது. (7-4)

# ஆப்கானில் பயங்கரவாதத்தை ஒடுக்க ரஷ்யாவின் உதவியை நாடும் அமெரிக்கா

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் பயங்கரவாதத்தை ஒழிக்க ரஷ்யா உள்ளிட்ட மத்திய ஆசிய நாடுகளின் உதவியை அமெரிக்கா நாடியுள்ளது.

தேடப்படும் பயங்கரவாதிகள் பட்டியலில் உள்ள 15இற்கும் மேற்பட்டோர் தலிபான்களின் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளனர். மேலும், ஆப்கானில் ஐ.எஸ்.ஐ.எஸ்., போன்ற பயங்கரவாத அமைப்புகள் தங்களின் பலத்தை வளர்க்க வாய்ப்புள்ளது.

இந்நிலையில், ஆப்கானில் பயங்கரவாத செயல்களை தடுக்க, ரஷ்யப்படைத் தளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாக அமெரிக்கா ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. ரஷ்யா மட்டுமின்றிமத்திய ஆசிய நாடுகளான தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான், துர்க்மேனிஸ்தான் போன்ற நாடுகளுடனும் அமெரிக்கா ஆலோசித்து வருகிறது. (7-4)

## முதல் மின்சார காரை அறிமுகப்படுத்திய ரோல்ஸ் ரோய்ஸ்



(லண்டன்)

உலகின் பிரபலமான முன்னணிஆடம்பர கார் கம்பெனியாக ரோல்ஸ் ரோய்ஸ் நிறுவனம் மின்சாரத்தில் இயங்கும் கார்களைத் தயாரிக்க உள்ளதாக அறிவித்துள்ளது.

இந்நிலையில் அதன் முதல் மின்சாரக் கார் நேற்று முன்தினம் புதன்கிழமை அறிமுகப்படுத்தப்பட்டது. ஒருமுறை சார்ஜ் செய்தால் 500 கி.மீ. தூரம் வரை பயணிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த கார் முந்தைய ரோல்ஸ் ரோய்ஸ் கார்களில் இருந்த அனைத்து விதமான வசதிகளுடனும் வடிவமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்காரின் விலை குறித்த அறிவிப்புகளை அந் நிறுவனம் வெளியிடவில்லை.

இதுகுறித்து பேசிய அந்நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி அடுத்த 20 ஆண்டுகளில் ரோல்ஸ் ரோய்ஸ் நிறுவனம் தங்களது அனைத்து தயாரிப்புகளையும் மின்சார வாகனங்களாக மாற்றுவோம் எனத் தெரிவித்துள்ளது. (7-4)

# தடைப்பட்ட தகவல் தொடர்பு வழிகளை மீட்டெடுக்க தென்கொரியாவுக்கு அழைப்பு

(பியாங்யாங்)

எதிர்வரும் நாட்களில் தென் கொரியாவுடனான தடைப்பட்ட தகவல்தொடர்பு வழிகளை மீட்பதற்கான தனது விருப்பத்தை வடகொரிய ஜனாதிபதிகிம்யொங் உன் வெளியடுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக நிகழ்ச்சிநிரல் குறித்து விவாதிக்க கூடிய, நாட்டின் ரப்பர் ஸ்டாம்ப் பாராளுமன்றின் உரையின் போதே கிம் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அமெரிக்கா தனது “விரோதக்கொள்கையை” மாற்றாமல்பேச்சுவார்த்தைகளை முன்மொழிவதாக குற்றம் சாட்டினார்.

கிம்மின் இந்த அறிக்கை தென் கொரியாவிற்கும் வோஷிங்டனுக்கும் இடையே ஒரு பிளவை ஏற்படுத்தும் வெளிப்படையான முயற்சியாகும்.

தென்கொரியா-அமெரிக்காவிற்கு எதிராக 2020 ஓகஸ்ட் தொடக்கத்தில் வட கொரியா தகவல் தொடர்புகளை துண்டித்து விட்டமையும் குறிப்பிடத்தக்கது. (7-4)

# ஈக்வடார் சிறையில் கலவரம் 116 பேர் உயிரிழப்பு

(கீடோ)

தென் அமெரிக்க நாடான ஈக்வடாரில் ஏற்பட்ட சிறைக் கலவரத்தில் 116 கைதிகள் உயிரிழந்தனர்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது, குவாயாகுவில் நகரிலுள்ள மண்டல சிறைச்சாலையில் கைதிகளிடையே கடந்த செவ்வாய்க்கிழமை கலவரம் வெடித்தது.

இதில், இரு குழுக்களைச் சேர்ந்த கைதிகள் துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் குத்தியும் பரஸ்பரம் தாக்கிக் கொண்டனர். இந்தக் கலவரத்தில் வெடிகுண்டுகளும் பயன்படுத்தப்பட்டன.

இதில் 116 பேர் உயிரிழந்தனர் 80 பேர் காயமடைந்தனர்.

கலவரம் தொடங்கிய 5 மணி நேரத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் சிறைச்சாலையை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்று அதிகாரிகள் கூறினர்.

ஈக்வடாரின் 3 சிறைகளில் கடந்த பெப்ரவரிமாதம் ஒரே நேரத்தில் நடைபெற்றகலவரத்தில் 79 கைதிகள் கொல்லப்பட்டது நினைவு கூரத்தக்கது. (7-4)

# கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பைஸர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இன்று ஆரம்பம்

**(தர்மபுரம்)**

**கிளிநொச்சிமாவட்டத்தைச் சேர்ந்த நாட்பட்ட நோயையுடைய மாதாந்த சிகிச்சை பெறும் சிறுவர்களுக்கு இன்று முதல் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பைஸர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாவட்ட தொற்று நோயியல் வைத்தியர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.**

குறித்த விடயம் தொடர்பாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் மாதாந்த சிகிச்சை, உள நலசிகிச்சைக்கு செல்லும் சிறுவர்கள் குறித்த தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும். மாவட்டத்தில் குறித்த நாட்பட்ட நோயையுடைய பதிவு செய்யாத சிறுவர்கள் அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பெயர்களை பதிவு செய்து கொள்ள முடியும். பதிவு செய்து கொள்பவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் பணிகள் பின்னர் அறிவிக்கப்படும். பெற்றோர்கள் குறித்த சந்தர்ப்பத்தை தவறவிடாது பிள்ளைகளை அழைத்து வந்து தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்தார். (7-4-6-316)

# சிறுவர் தினத்தை முன்னிட்டு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு

(மன்னார்)

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம் மற்றும் மன்னார் பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டுள வீரசிங்க தலைமையில் கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட 100 பாடசாலை சிறுவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதே நேரம் கற்றல் செயற்பாடுகள் மேற்கொள்வதில் சிரமம் உள்ள மற்றும் கற்றல் உபகரணங்களை கொள்வனவு செய்வதில் கஷ்டம் உள்ள மாணவர்களுக்கு மேலதிக கற்றல் உபகரணக்களை வழங்குவதற்கான ஏற்பாடும் மன்னார் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தேவையுடைய மாணவர்கள் பொலிஸ் நிலையத்தை தொடர்பு கொள்வதன் ஊடாக கற்றல் உபகரணங்களை பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். (7-4-6-285)

# நிரந்தர நியமனம் கோரி பட்டதாரிகள் சங்கத்தினரால் ஆர்ப்பாட்டம்



(நெளுக்குளம்)

நிரந்தர நியமனம் கோரி ஒன்றிணைந்த பட்டதாரிகள் சங்கத்தினரால் வவுனியாப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்தினம் மாலை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது காலத்தை வீணடிக்காதே, நிரந்தர நியமனத்தை உடன் வழங்கு, கதைத்தது காணும் உறுதி மொழியை நிறைவேற்று, 20 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுக்கு போதுமா? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பாதாதைகளை ஏந்திய வாறு, கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

செப்டெம்பர் 03 ஆம் திகதியுடன் ஒருவருட பயிற்சிக்காலம் முடிவடைந்த பின்பும் எமக்கான நியமனம் வழங்கப்படாமல் இருப்பது என்பது வேதனைக்குரிய விடயமாகும். அதுமாத்திரமின்றி எங்களது பட்டதாரிபயிலுனர்கள் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் சமுர்த்திபோன்றவற்றிற்கு வாரத்தில் 07 நாட்களும் எதுவித மேலதிக கொடுப்பனவுகள் இன்றி அழைக்கப்படுகின்றனர்.


இந்நிலையில் தற்போதைய வேடிக்கையான அரசாங்கம் எங்களின் பயிற்சிக்காலத்தை 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவுடன் மேலும் 06 மாதம் நீடித்திருப்பதானது எங்களது வாழ்க்கையில் மேலும் கஷ்டத்தை ஏற்படுத்துவதாகவே இருக்கின்றது.

பல்வேறு போராடங்களின் ஊடாக கிடைக்கப்பெற்ற இந்த நியமனத்தை ஒரு வரப்பிரசாதமாக நினைத்துக்கொண்டு இருந்தோம். ஆனால் இந்த அரசாங்கம் எங்களை கஷ்டத்துக்குள்ளாக்கி போராட்டங்களை தொடர்வதற்கு தள்ளியுள்ளது.

எனவே இந்த அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிக்கு ஏற்ப செப்டெம்பர் 03 என்ற திகதியின்படி எங்களிற்கான பயிற்சி நியமனத்தை உறுதிப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தனர். (7-4-6-299)




# மன்னாரில் இராணுவத்தினரால் வீதிச் சோதனை முன்னெடுப்பு



(மன்னார்)

மன்னார் பகுதியில் இராணுவத்தினர் தற்போது திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை முதல் மன்னார் பஜார் பகுதி மற்றும் மன்னார் மேல் நீதிமன்ற பிரதான வீதி ஆகிய பகுதிகளில் நிற்கின்ற இராணுவத்தினர் மக்களை சோதனை செய்து வருகின்றனர்.

குறிப்பாக குறித்த வீதிகள் ஊடாக மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி மற்றும் ஏனைய வாகனங்களில் பயணிப்பவர்கள் நிறுத்தப்பட்டு அவர்களின் உடைமைகளை சோதனை செய்யப்படுவதோடு, வாகனங்களும் சோதனை செய்யப்படுகிறது. (7-4-6-285)



நாடு பூராகவும் சமுர்த்தி சௌபாக்கியா வாரம் 3 ஆம் கட்ட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்திலும் குறித்த வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட 47 பயனாளிகளுக்கு வீட்டுத்திட்டத்திற்கான காசோலை,வீட்டுத் தோட்டத்திற்கான தென்னங்கன்று வழங்குதல், இடம் பெற்றதோடு,சமுர்த்தி சங்கத்தினை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் இடம் பெற்றது. (படம்:-ஜோசப் நயன்)

# இராணுவத்தினரால் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுப்பு



(குருமன்காடு)

கொவிட் பரவல் தீவிரமடைந்ததையடுத்து நாடு முழுவதும் 41 நாட்கள் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைபடுத்தப்பட்டிருந்த நிலையில் நாளை காலை 4 மணியுடன் அச்சட்டமானது தளர்த்தப்பட உள்ளது. இந்நிலையில் வன்னி பாதுகாப்புப்படை தலைமையக தளபதியின் அறிவுறுத்தலுக்கமைய இராணுவத்தினர் வவுனியா நகரின் பொது இடங்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் தொற்று நீக்கும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளனர். வவுனியா நகரப் பகுதியின் பேருந்து தரிப்பிடம், அரச மற்றும் தனியார் வங்கிகள், சந்தைகள், மக்கள் கூடும் இடங்கள், முச்சக்கரவண்டி தரிப்பிடங்கள் போன்ற பொது இடங்களில் தொற்று நீக்கம் செய்யப்பட்டது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள், நகர சபை பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் நகர சபை தீயணைப்பு வாகனத்தின் உதவியுடன் தண்ணீர் விசிறி குறித்த பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (7-4-6-250)

## நாடு திறக்கப்பட்ட பின்னர்

# ஐந்தாவது அலை உருவாகுவதை பொது மக்கள் தடுக்க வேண்டும்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

நாட்டை திறந்த பின்னர் ஐந்தாவது கொவிட் அலை உருவாவதனை தடுப்பதற்காக பொது போக்குவரத்தை உரிய முறையில் முகாமைத்துவம் செய்வது மிகவும் முக்கியம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்காக உரிய பிரிவுகள் கூட்டு வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என சங்கத்தின் ஊடக குழு உறுப்பினரான வைத்தியர் நலிந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாள் ஒன்றுக்கு 4 ஆயிரம் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட காலப்பகுதியை நாங்கள் பார்த்தோம். பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டு வந்த தமையையும் அவதானித்தோம். எனினும், தற்போது தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்புக்கள் அதிகளவு குறைந்துள்ளன.

இந்நிலையில், நாட்டை திறப்பதே சரியான தீர்மானமாக இருக்கும். நாட்டை திறந்தவுடன் மக்கள் தங்கள் பொறுப்புகளை உணர்ந்து சரியான முறையில் செயற்பட வேண்டும்.

இரவில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்துவதனை விடவும் இரவு நேர கேளிக்கை விடுதிகளை மூடி வைத்து மக்கள் கூடுவதனை தவிர்க்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# கொழும்பு துறைமுகத்தின்

## மேற்கு முனைய ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 51 வீத பங்குகளை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்குவதற்கான உடன்படிக்கை நேற்று முற்பகல் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

துறைமுக அதிகார சபையின் சார்பில் அதன் தலைவரும் அதானி நிறுவனத்தின் பிரதிநிதிகளும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதாக துறைமுகம் மற்றும் கப்பல் சேவைகள் அமைச்சர் ஊடகம் ஒன்றிற்கும் உறுதிப்படுத்தினார்.

'வெஸ்ட் கன்டெய்னர் இன்டர்நஷனல் டேர்மினல்' என்ற பெயரில் புதிய கூட்டு நிறுவனத்தினால் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன்படி அந்த நிறுவனத்தின் மற்றைய கூட்டு நிறுவனமான ஜோன் கீல்ஸ் நிறுவனமும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

அதனடிப்படையில், கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 51 வீத பங்குகள் இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கும் 34 வீத பங்குகள் ஜோன் கீல்ஸ் நிறுவனத்திற்கும் 15 வீத பங்குகள் துறைமுக அதிகார சபைக்கும் கிடைக்கின்றன. (நி-5)

# சிகரெட்டுக்கான வரியை அதிகரிக்க எதிர்பார்ப்பு

(கொழும்பு)

அரச வருமானத்தை உயர்த்துவதற்காக அடுத்த வருடத்திற்கான பாதீட்டில் சிகரெட்டுக்கான வரியை அதிகரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் பெரும்பான்மையானோர் உள்ளதாக மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் மையம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் 89.3 சதவீதமானோர் சிகரெட்டுக்கான வரியை அதிகரிக்க வேண்டும் என விருப்பம் தெரிவித்துள்ளதாக அந்தத் தகவல் மையம் குறிப்பிட்டுள்ளது. சிகரெட்டுக்கான விலை எவ்வளவு அதிகரிக்கவேண்டும்என கேள்வி எழுப்பப்பட்டிருந்த நிலையில், அதற்கு 59.1 சதவீதமானோர் 25 ரூபாவிற்கும் மேலாக விலை அதிகரிக்க வேண்டும் என பதிலளித்துள்ளனர். (நி-5)

# மூன்று வாகனங்கள் விபத்து; 6 பேர் காயம்

(ஹற்றன்)

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் ரதல்ல குறுக்கு வீதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட விபத்தொன்றில் 6 பேர் காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா பகுதியிலிருந்து தலவாக்கலை பகுதிக்கு சென்று கொண்டிருந்த வான் தலவாக்கலை பகுதியிலிருந்து நுவரெலியா பகுதியை நோக்கி சென்ற வானுடன் மோதி விபத்துக்குள்ளாகி அருகில் இருந்த மண்மேட்டுடன் மோதி அதன் பிறகு வீதியில் பயணித்த முச்சக்கர வண்டியுடன் மோதி குடை சாய்ந்துள்ளது.



இவ்விபத்தில் குடை சாய்ந்த வானில் பயணித்த நால்வரும், முச்சக்கரவண்டியில் பயணித்த இருவரும் காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நானுஓயா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-5)

# வீட்டின் முதுசங்களே முதியோர்




ஒக்டோபர் முதலாம் திகதி சர்வதேச முதியோர் மற்றும் சிறுவர் தினமாகும். மூத்த பிரஜைகள் என்று அழைக்கப்படும் முதியோர் களை ஒவ்வொரு சமூகமும் கண்ணியமாகவும் கௌரவமாகவும் நோக்கி அவர்களை மதிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் முகமாக ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஆண்டு தோறும் ஒக்டோபர் முதலாம் திகதியை சர்வதேச முதியோர் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

1990 ஆம் ஆண்டு டிசெம்பர் 14 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் கொண்டு வரப்பட்ட பிரிவு 45/106 தீர்மானத்திற்கமையவே இத்தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி முதன் முதலாக 1991 ஆம் ஆண்டு சர்வதேச முதியோர் தினம் உலகெங்கும் கொண்டாடப்பட்டது.

தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டுகளும் கொண்டாடப்பட்டு வருகின்றது. உலகெங்கும் வாழும் முதியோர்களின் நலன் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதும் அவர்களுக்கென ஒரு சமூக கட்டமைப்பை உருவாக்குவதுமே இந்நாளின் பிரதான நோக்கமாகும்.

இவ்விடத்தில் முதுமை என்றால் என்ன என்பதைப் பற்றி சிந்தித்தல் வேண்டும். பொதுவாக 60 வயதுக்கு மேற்பட்டோர் முதியோர் என வரையறுக்கப்பட்டாலும்கூட, முதுமை என்பது ஒரு நபரின் பிறப்பிலிருந்து தொடங்குகின்றது என்பர். ஒரு குழந்தையானது வளர்ந்து பெரிதாகும் ஒவ்வொரு கால கட்டத்திலும் முதுமை நிகழ்வு ஏற்பட்டுக் கொண்டே இருக் கின்றது. முதுமையும் இறப்பும் மனிதன் சந்திக்கும் தவிர்க்க முடியாத நிலையாகும்.

முதுமையடையும்பொழுது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியானது மெதுவாக குறைய ஆரம்பிக்கின்றது, இது பல நோய்த்தொற்றுகளுக்கு, குறிப்பாக இதய நோய், பக்கவாதம், மூட்டுவலி, புற்று நோய், நீரிழிவு நோய் போன்றவை பெரிதும் முதுமைப்படுத்தலின் காரணமாகவே ஏற்படுகிறது.

ஒரு சிலர் தமது பிள்ளைகளாலேயே முதியோர் இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் பிள்ளைகளால் கைவிடப்பட்ட நிலையில் உள்ளனர். புள்ளிவிபரங்களைப் பார்க்கும் போது இலங்கையில் 48.3 சதவீத மான முதியோர்கள் தமது பிள்ளைகளின் பராமரிப்பில் வாழ்ந்து வருகின்றனர். ஓய்வூதியம் மூலம் 13.5 வீதத்தினரும் விவசாயம் மற்றும் ஏனைய தொழில்கள் மூலம் 10.3 வீதத்தினரும் தமது சொத்துகளின் வருமானம் மூலம் 7.7 வீதத்தினரும் வாழ்க்கையை நடத்துகின்றனர்.

பிரபல்யம் மிக்க ஆங்கில மகாகவி வில்லியம் ஷேக்ஸ்பியர் முதுமை எவ்வாறு உருவாகிறது? அதனை வரவேற்பது எப்படி? என்பதை இவ்வாறு இயம்பினார். ஒருமனிதன் தன் வாழ்நாளில் பல பாத்திரங்களை ஏற்கிறான். முதலில் குழந்தை, பிறகு மாணவன் பின்னர் விடலைப்பருவம், தொழில் வாய்ப்பை பெற்றபின் குடும்பஸ்தன் ஆகின்றான். காலச்சக்கரத்தின் அபரிமித சுழற்சியின் விளைவாக இறுதியில் மூக்குக் கண்ணாடி அணிந்து முகம் சுருங்கி, உடல் மெலிந்து பல், கண்பார்வை எல்லாம் அற்ற நிலையில் கூன் விழுந்து முதுமையாகி மறைவது தான் சரித்திரம் என்கிறார். எனவே முதுமையை மதித்து முதியோரைக் காப்போம்.

## சிறுவர் தினம்

உணர்வுபூர்வமாக உலக நாடுகளில்  
பத்தாம் மாதம் முதலாம் திகதியில்  
பதிவு பெற்றது சிறுவர் தினம்  
சிறுவர் உரிமைகளை  
சிறந்த முறையில் எடுத்துக்காட்டுவதே  
சிறுவர் தினம்  
அன்புக்கு அதிபதியானவர்கள்  
வஞ்சகமில்லா உள்ளத்தின்  
வடிவமானவர்கள்  
பசுமையான நினைவுகளால்  
பறந்து திரியும் சிறுவர்களை  
பல வேலைகளுக்கு பதுக்கி வைத்து  
துஷ்பிரயோகங்களால் துரத்தியடித்து  
துன்பக்காற்றை சுவாசிக்க வைத்து  
துவண்டுவிடச் செய்யும் இவ்வுலகில்  
சிறுவர்தான்  
எதிர்காலத் தூண்கள்  
எதிர்காலத் தலைவர்கள்  
எதிர்கால வழிகாட்டிகள்  
அவர்களின் ஆற்றல்களை அறிந்து  
அதற்கேற்ப அவர்களை ஒழுங்கமைத்து  
வளமிக்கவர்களாக வடிவமைக்க  
வேண்டும்  
வாழ்க்கையின் வழிகாட்டிகளை  
வரம் என நினைத்து  
சாதனைகளில் சரித்திரம் படைத்து  
உலகத்தில் உள்ளவர்கள்  
உற்றுநோக்கும் வண்ணம்  
சிறுவர் மனதில்  
சிறந்த சிந்தனைகளை உருவாக்கி  
சிறப்புடன் வாழ வழிவகை செய்வோம்

கவிஞர் N. ரஜிகுமார்  
ஆனைக்கோட்டை

# தினமும் 5 ஆயிரம் மெற்றிக்தொன் உணவு விரயம் செய்யப்படுகிறது - மகிந்த அமரவீர

**(கொழும்பு) நாட்டில் தினமும் 5 ஆயிரம் மெற்றிக் தொன் சமைக்கப்பட்ட மற்றும் சமைக்கப்படாத உணவு வீணாகிறது என சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**



குறித்த தொகை ஆண்டுக்கு 1.3 பில்லியன் தொன் நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பயிர்களில் நூற்றுக்கு சுமார் 40 சதவீதம் வீணடிக்கப்படுகின்றது.

சுமார் 5,000 மெற்றிக் தொன் சமைக்கப்பட்ட, சமைக்கப்படாத உணவு ஒவ்வொரு நாளும் குப்பையாக வீசப்படுகிறது.

இந்த நிலை நாட்டுக்கு மிகப்பெரிய பொருளாதார இழப்பாகும்." எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# இரண்டு வாரங்களுக்கு தொடரூந்து சேவையில்லை

(கொழும்பு)

ஊரடங்குச் சட்டம் இன்று நீக்கப்படும் நிலையில் இரு வார ங்களுக்கு புகையிரத சேவைகள் முன்னெடுக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

கொவிட் பரவல் காரணமாக நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுப்போக்குவரத்து சேவைகளும் இடைநிறுத்தப்பட்டன.

இந்நிலையில் இன்று அதிகாலை 4 மணியுடன் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நீக்கப்படும் நிலையில் நேற்று அரசாங்கம் இவ்வாறு அறிவித்தது.

ஊரடங்கு நீக்கப்பட்டாலும் இரண்டு வாரங்களுக்கு புகையிரத சேவைகள் முன்னெடுக்கப்படமாட்டாது என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# மேலும் 4 மில்லியன் பைசர் தடுப்பூசிகள்



(கொழும்பு)

நாட்டிற்கு மேலும் 4 மில்லியன் பைசர் தடுப்பூசி டோஸ்கள் நேற்றுக் காலை கொண்டு வரப்பட்டுள்ளன. இலங்கையில் ஒரே தடவையில் அதிகபடியாக இறக்குமதிசெய்யப்பட்ட பைசர் தடுப்பூசிகள் அளவுகள் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# தடுப்பூசி அட்டையை காட்டி உணவகங்களுக்குள் நுழையும் நடைமுறை?

(கொழும்பு)

எதிர்வரும்காலங்களில் கொழும்பிலுள்ள உணவகங்களில் தடுப்பூசி அட்டைகளைக் காட்டி வாடிக்கையாளர்கள் உணவருந்தும் நடைமுறை கொண்டு வரப்படலாம் என கொழும்பு நகர உணவகக் குழுமத்தின் தலைவர் ஹர்போ குணரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பாக கொழும்பில் உள்ள உணவக உரிமையாளர்கள் பலரிடம் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், தடுப்பூசி அட்டையை உணவகத்தில் பணிப்புரிபவர்களும் காட்டுவது,உணவகத்திற்கு ஆதரவளிக்கும் வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கையை அளிக்கும் எனவும் ஹர்போ குணரத்ன கூறியுள்ளார்.அத்துடன் வாடிக்கையாளர்கள், இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டமைக்கான அட்டையை தொலைபேசியில் ஒளிப்படம் எடுத்து வைத்து, அதனைக் கூட காண்பிக்க முடியுமெனவும் குணரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பெரும்பாலான உணவகங்களிலுள்ள ஊழியர்களும் தடுப்பூசி செலுத்தப்பட்டதற்கான சின்னம் அணிந்து இருப்பார்கள். அதனால், வரும் வாடிக்கையாளர்களுக்கு ஊழியர்கள் தடுப்பூசி செலுத்தியுள்ளார்கள் என்பது தெரியும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பூச்சி வைத்தியம்

எங்கே போயிட்டு வருகின்றீர்கள்? என்று கேட்டேன் எனக்கு வேண்டப்பட்ட ஒருத்தரைப் பார்த்து.

வைத்தியசாலைக்கு என்றார்.எந்த வைத்தியசாலைக்கு என்றேன். மாட்டு வைத்தியசாலைக்கு என்றார். என்ன விடயம் என்றேன். மாமனாருக்கு உடம்பு சரியில்லை அது தான் மாட்டு வைத்தியசாலைக்குப் போய்விட்டு வருகின்றேன் என்றார். அடப்பாவி..அதற்கு அந்த வைத்தியசாலைக்கா போவார்கள்? என்றேன். ஆச்சரியமாக.

அட அது இல்லையப்பா..முதலில் எங்கள் குடும்ப டாக்டரைத் தான் தேடிக் கொண்டு போனேன். அவர் அந்த நேரத்திலே அவர் வளர்க்கின்ற நாய்க்குட்டிக்கு உடம்பு சரியில்லை என்று சொல்லி அதைத் தூக்கிக் கொண்டு மாட்டு ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கின்றதாக சொன்னார்கள். அது தான் அங்கே போய் அவரைச் சந்தித்து விடயத்தைச் சொல்லிவிட்டு வருகின்றேன் என்றார்.

பின்பு தான் எனக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. பொதுவாக நமக்குத் தெரிந்த வரையில் டாக்டர்கள் இரண்டு வகை.நமக்கு வைத்தியம் செய்கின்ற டாக்டர்கள் ஒரு வகை. எங்களிடம் இருக்கின்ற ஆடு–மாடு கோழிக்கு வைத்தியம் செய்கின்ற டாக்டர்கள் ஒரு வகை. இப்பொழுதுதான் எனக்குத் தெரியும். இன்னொரு வகையான டாக்டர்களும் உண்டு என்பது. அது யார் என்றால் பூச்சிகளுக்கு வைத்தியம் செய்கின்ற டாக்டர்கள். அதாவது பூச்சி டாக்டர்கள். வெளிநாடுகளிலே அப்படியெல்லாம் கூடச் சில பேர் இருக்கின்றார்களாம்.

பிரிட்டனிலே யார்க்ஷைர் வட்டாரத்திலே ராதர்ஹாம் என்று ஒரு ஊர். அங்கே ஒரு விலங்கியல் மருத்துவர்.பெயர் டாக்டர் லான்ஸ் ஜெப்சன். அவர் வைத்தியசாலை வாசலில் பார்த்தீர் கள் என்றால் தினமும் நிறையப் பேர் நின்று கொண்டிருப்பார்கள்.. கையிலே கண்ணாடிக் கூண்டோ ..தகர டப்பாவோ இருக்கும்.

அதற்குள்ளே ஏதாவது பூச்சிகள் இருக்கும். அதற்கு வைத் தியம் செய்ய வந்தவர்கள் தான் அவர்கள் எல்லாம்.சிலந்திப் பூச்சி ..பல்லி.. தேள்.. பாம்பு.. இப்படி ஏதாவது இருக்கும். பொழுது போக்காக சிலபேர் நாய்..பூனை.. கிளி.. மைனா... புறா... இப்படி ஏதாவது வளர்க்கின்றார்கள்.. அது மாதிரி இப் பொழுதெல்லாம் தேள் ..பல்லி பாம்பு.. பூச்சி.. இதையெல்லாம் வளர்க்க ஆரம்பித்து விட்டார்களாம்.இது ஒரு புது பாசன் இப்பொழுது.

கூண்டுக்குள்ளே டப்பாவுக்குள்ளே போட்டு வளர்ப்பது.. அதுக்கு ஏதாவது நோய் வந்துவிட்டால் வைத்தியம் செய்வதற்கு டாக்டரிடம் வந்துவிட வேண்டியது. இரத்தம் உறிஞ்சும் அட்டைகள் கூட இவர்களிடம் வைத்தியத்திற்கு வருகின்றதாம். சிலந்திகளிலே செங்கால் சிலந்தி என்று ஒரு வகை. மத்திய அமெரிக்கக் காடுகளிலே இது.. அதிகம். சிலந்திகளிலேயே மிகவும் விலை உயர்ந்தது இந்த ரகம் தான். கால்களிலே சிவப்புக் கோடுகள் இருக்கும். இந்த இனம் இப்பொழுது குறைந்து கொண்டு வருவதால் சர்வதேச விதிகளின் படி இவற்றின் ஏற்றுமதி–இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டி ருக்கின்றது.அதனால் இதை வளர்க்கின்றவர்கள் வீட்டுக் குள்ளேயே இனவிருத்தி மூலமாக பெருக்கி விற்பனை செய்து கொண்டு வருகின்றார்கள்.

இந்த வகைச் சிலந்தி தான் இப்பொழுது வைத்தியத்திற்கு அதிகம் வருகின்றதாம்.சரி.. இதற்கெல்லாம் எப்படி வைத்தியம் செய்கின்றார்கள்? முதலில் அதைக் குளிர்சாதனப் பெட்டியின் வழுவழுப்பான சுவரில் விட்டவுடனே அதுஎல்லாம் மெதுவாக இறங்கிவரும். அப்பொழுது அதன் நோயைக் கண்டுபிடிக்கிறது சுலபம்.அப்புறம் அதற்கு கிருமிகளைக் கொல்லும் மருந்துகளையோ வலி நிவாரண மருந்துகளையோ கொடுப்பார்கள். கால் உடைந்த சிலந்திகளுக்கு பசையைக் கொண்டு ஆப்ரேஷன் செய்வார்கள். சில சிலந்திகளுக்கு உடைந்த காலை எடுத்துவிட்டால் புதியகால் வளர்ந்துவிடும்.

சிலந்திகளை மனிதர்கள் கையிலே எடுக்கின்ற பொழுது.. அது பயந்து போய் கீழே குதிக்கும்.. அதனால் கால் உடைந்து விடுகின்றது. இல்லை என்றால் வயிறு சேதமடைகின்றது. அந்த நிலைமையிலே வருகின்ற சிலந்திகளுக்கு மயக்க மருந்து கொடுத்து ஆபரேஷன் செய்வார்களாம்.

பார்த்தீர்களா பூச்சிகளுக்கு வந்த வாழ்வை. எங்கள் ஊரிலேயும் வீடுகளிலே பூச்சிகள் வளர்வது உண்டு.ஒருத்தர் வந்தார். எனக்கு மூவாயிரம் கரப்பான் பூச்சிகள் அவசரமாக தேவைப்படுகின்றது. எங்கே கிடைக்கும்? என்று கேட்டார்.

கரப்பான் பூச்சியா எதற்கு? என்று கேட்டேன். அது வந்து வேறு ஒன்றுமில்லை. நான் குடியிருக்கின்ற வாடகை வீட்டைக்காலி செய்யப் போகின்றேன்.. வீட்டுச் சொந்தக்காரர் என்ன சொல்கின்றார் என்றால். இந்த வீட்டுக்கு நான் குடிவந்த பொழுது எப்படி இருந்ததோ அதே நிலைமையில் விட்டுவிட்டுப் போக வேண்டும் என்று வீட்டுக்காரர் சொல்லியிருக்கின்றார்... அதனால் தான் கேட்டேன்.. என்றார்.




# அகந்தை

துறவி ஒருவர் ஒரு நாட்டுக்கு விஜயம் செய்தார். ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் ஒரு குடிசை போட்டுத் தங்கி, நாட்டு மக்களுக்கு உபதேசம் செய்யத் தொடங்கினார்.

மக்கள் தங்கள் குறைகளை அவரிடம் சொல்லி, அவரின் ஆசியைப் பெற்றுச் செல்லத் தொடங்கினர். அவர் சொன்னதெல்லாம் நடக்கிறது என்ற செய்தி நாடு முழுவதும் பரவிவிட்டது.

இந்த விடயம் அந்த நாட்டு மன்னனின் காதுக்கு எட்டியது. உடனே, சில முக்கியஸ்தர்களை அழைத்துக் கொண்டு, துறவியின் இருப்பிடத்துக்குச் சென்றார்.

அப்போது அந்தத் துறவி தன் குடிசையைச் சுற்றி சில மரக்கன்றுகளை நட்டுக் கொண்டிருந்தார். அதனால் மன்னன் வந்திருப்பதை அவர் கவனிக்கவில்லை. உடனே மன்னன், "துறவி மகானே! நான் மன்னன் வந்திருக்கிறேன்!" என்றார்.



துறவி திரும்பாமல், "போ!" என்று சொல்லிவிட்டு, தன் வேலையைத் தொடர்ந்தார். மன்னனுக்குக் கோபம் வந்தது.

"துறவியே! உம்மைத் தேடி நானே வந்திருக்கிறேன். சிறிது கூட மரியாதையே இல்லாமல் போ என்கிறீரே!" என்று கத்தினான்.

துறவி மீண்டும் திரும்பாமல் "மறுபடியும் சொல்கிறேன், நீ போகலாம்!" என்றார். மன்னனுக்குக் கோபம் பொங்கியது. அதைக் கண்ட அமைச்சர் அமைதியாக இருக்கும்படி, சைகை காட்டினார். மன்னன் சிரமப்பட்டு, தன் கோபத்தை அடக்கினான். "துறவி மகானே! இப்போது நான் போகிறேன். மறுபடியும் எப்போது நான் வரட்டும்?" என்று கேட்டான் மன்னன்.

"நான் செத்த பிறகு வா!" என்றார் துறவி. அதைக் கேட்டு மன்னன் உட்பட அமைச்சர் பிரதானிகள் அனைவரும் திடுக்கிட்டனர்.

"நீங்கள் செத்த பிறகு வரவா? அப்போது வந்து உங்களை எப்படிப் பார்ப்பது? உங்களிடம் எப்படிப் பேசுவது?" என்று கேட்டான் மன்னன்.

துறவி இப்போது அவனை ஏறிட்டுப் பார்த்தார். "நான் செத்த பிறகு என்றால், என் மறைவுக்குப் பிறகு என்று அர்த்தமல்ல... நான் குறிப்பிட்ட "நான்" என்பது உன்னுள் இருப்பது. உன் அகந்தையை விட்டு, ஒரு சாதாரண மனிதனாக வந்து என்னைப் பார் என்பது தான் நான் சொன்னதன் பொருள்!" என்றார் துறவி.

தன் அகந்தையை எண்ணி தலை கவிழ்ந்தான் மன்னன்.

# மகாபாரதம்




உயிர் எந்த நாட்டிலோ, எந்தக் காட்டிலோ, எந்த நதியிலோ, எந்த மலையிலோ எத்தகைய பிறவி எடுக்கும் என யாராலும் கூற முடியாது.

கர்மவினைக்கேற்பக் காலம் உயிர்களை பல்வேறு இடங்களில் பல்வேறு பிறப்புகளில் தள்ளிவிடுகிறது.

அவற்றின் ஆயுள் முடியும் காலத்தில் மரணம் அவற்றை அழித்து விடுகிறது. மூப்பும், மரணமும் செந்நாய்களைப் போல வலிமையுள்ளவற்றையும் சிறியனவும் பெரியனவுமான எல்லாவகை உயிர்களையும் விழுங்கி விடுகின்றன.

எந்த நேரத்திலும் மரணம் என்பது உறுதி. உயிரினங்களின் வாழ்க்கைத் தன்மை இவ்வாறு இருக்கும் போது பிறப்புக்காக மகிழ்ச்சியடைவதும், இறப்புக்காக வருந்துவதும் ஏன்?

வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்தோர் வாழ்க்கை இனிது என மகிழவும் மாட்டார்கள். துன்பமானது என இகழவும் மாட்டார்கள்.

உண்மைநிலை இப்படி இருக்க நீ ஏன் மனவருத்தம் கொள்கிறாய்? நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? எங்கே செல்லப் போகிறேன்? என்று ஏன் ஏக்கம் கொள்கிறாய்? சுவர்க்கத்தை கண்டவர் யார்? நரகத்தைக் கண்டவர் யார்? அப்படி அவற்றைப் பார்த்தவர்களை நாம் பார்த்ததில்லை.

எனவே, வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்து நல்ல கதி கிடைக்க வேண்டுமாயின் தானதருமங்களை செய்வாயாக" என பஞ்சசிகர் ஜனகரிடம் கூறினார்." என்று பீஷ்மர் தருமரிடம் உரைத்தார்.

**நட்புக்குத் துரோகம் செய்யக்கூடாது**

"நட்புக்குத் துரோகம் செய்யக்கூடாது" என்பதை தருமருக்கு ஒரு கதை மூலம் விளக்கினார்.

வடக்கே வேதம் அறியா அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் யாகத்திற்காக பொருள் மிக்கவர் நிறைந்திருந்த ஒரு கிராமத்தை அடைந்தான். அங்கு ஒரு திருடன். அவனுக்கு அந்தணரிடம் பக்தி அதிகம். தானம் செய்வதில் விருப்பம் கொண்டவன். அவனிடம் யாசிக்க அந்தணன் சென்றான்.

(தொடரும்)

அறிவே ஒருவனின் உண்மையான பலம்.
– பிரான்சிஸ் பேகன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சேவல் கூவியதால் விடிந்தது என்று எண்ணி...

கம்பராமாயணத்தில் அகலிகை என்ற பாத்திரத்தைப் படிக்காதவர்கள் இருக்க மாட்டார்கள்.

அதிலும் குறித்த அகலிகையின் காதையைப் படிப்பவர்கள் இஃது கம்பராமாயணத்துக்குள் சேர்க்கப்பட்டதன் காரணம் என்ன? என்ற விவாதத்தைத் தமக்குள் நடத்தவே செய்வர்.

எதுவாயினும் அகலிகையை அடைய வேண்டுமென நினைத்த இந்திரன், விடியலுக்கு முன்னதான பின்னிரவில் சேவலைக் கூவ வைத்து, அகலிகையின் கணவரான கௌதம முனிவரை துயிலெழச் செய்ய, முனிவர் சந்தியாவந்தனத்தின் பொருட்டு பூக்களைப் பறிப்பதற்காக வெளியில் செல்கின்றார்.

இவ்வாறு சதி செய்த இந்திரன் கௌதம முனிபுங்கவரின் சாபத்துக்கு ஆளான கதை தெரிந்ததே.

இவை ஒருபுறமிருக்க, சேவல் கூவியதால் விடிந்து விட்டது என்ற நினைப்பு கௌதம முனிவரின் வாழ்வில் மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது என்பதுதான் இந்தக் கதை உணர்த்துகின்ற உட்பொருள்.

ஆக, விடியலின்போது சேவல் கூவுவது வழமையேயன்றி, சேவல் கூவுவதால் விடியல் ஏற்படுவதில்லை என்ற மெய்ம்மை உணர்தற்குரியது.

இதை நாம் கூறும்போது, இது எதற்கானது என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

இங்குதான் ஒளிக்கும் – இருளுக்குமான வித்தியாசம்; மெய்ம்மைக்கும் – மாயைக்குமான வேறுபாடு என்பன பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆம், 2021 ஒக்ரோபர் முதலாம் திகதி இன்று ஊரடங்கு தனிமைப்படுத்தல் தளர்த்தப்படுகிறது.

அதாவது மக்கள் நடமாடுவதற்கான கட்டுப்பாடு நீக்கப்படுகிறது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக கடந்த 41 நாட்களாகத் தொடர்ந்து ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் இன்று தொடக்கம் மேற்படி ஊரடங்கு தளர்த்தப்படுகிறது.

இவ்வாறு ஊரடங்கு தளர்த்தப்படுகிறது என்பதற்காக, கொரோனாத் தொற்று முழுமையாக நீங்கிவிட்டது. இனி கொரோனாத் தொற்றுப் பரவமாட்டாது என்று யாரேனும் நினைத்துவிடாதீர்கள்.

உண்மையில் கொரோனாத் தொற்றின் அபாயம் இன்னமும் எங்களை விட்டு நீங்கவில்லை.

இப்போதும் தொற்றுப் பரவுகிறது. இறப்பு ஏற்படுகிறது.

ஆக, ஊரடங்குத் தளர்வை வைத்துக் கொண்டு, கொரோனா அபாயம் நீங்கிவிட்டது எனக் கருதி சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் நடமாடினால், அதன் விளைவு பேரழிவாகவே இருக்கும் கவனம்.

## 217 கிலோ மஞ்சளுடன் வடமராட்சியில் மூவர் கைது

(கரணவாய்)

இந்தியாவிலிருந்து வடமராட்சிக்குக் கடத்திவரப்பட்ட 217 கிலோகிராம் மஞ்சளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து கடத்திவரப்பட்டு வெளி இடங்களிற்கு ஏற்றிச் செல்ல முற்பட்ட 217 கிலோகிராம் மஞ்சள் நேற்று வியாழக்கிழமை வல்வெட்டித்துறைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளதுடன் அதனைக் கடத்திச் சென்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(ம-3,18,33,60)

## கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 51 வீத பங்குகளை இந்திய நிறுவனத்திற்கு கையளிக்க ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கையின் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 51 வீத பங்குகளை இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கு வழங்குவதற்கான உடன்படிக்கை நேற்று முற்பகல் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் அதன் தலைவரும் அதானி நிறுவனத்தின் பிரதிநிதிகளும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதாக துறைமுகம் மற்றும் கப்பல் சேவைகள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'வெஸ்ட் கன்டெய்னர் இன்டர்நெஷனல் டேர்மினல்' என்ற பெயரில் புதிய கூட்டு நிறுவனத்தினால் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன்படி அந்த நிறுவனத்தின் மற்றைய கூட்டு நிறுவனமான ஜோன் கீல்ஸ் நிறுவனமும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 51 வீத பங்குகள் இந்தியாவின் அதானி நிறுவனத்திற்கும் 34 வீத பங்குகள் ஜோன் கீல்ஸ் நிறுவனத்திற்கும் 15 வீத பங்குகள் துறைமுக அதிகார சபைக்கும் கிடைக்கின்றன.

(ம-3)

## வலி. மேற்குப் பிரதேச சபை தவிசாளருக்கு கொரோனா

(குப்பிழான்)

வலி.மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் த.நடனேந்திரனுக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தொற்று அறிகுறிகள் காணப்பட்ட நிலையில் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்ட அவர் தனிமைப்படுத்தல் மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

(ம-3,18,33)

## ஶ்ரீஶ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### படிமுறை வளர்ச்சி: ஆன்மாவின் கூறு அல்ல

ஆன்மாவுடன் மனம் லயித்திருக்கும் போது படிமுறை வளர்ச்சியைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். வளர்ச்சியடைவதைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தால் நீங்கள் மனத்தில் சிக்கி விடுகிறீர்கள். மனம் என்பது பருப்பொருளின் பகுதி ஆகும். பருப்பொருள் படிப்படியாக வளர்ச்சியடைந்து சிதைவடைகிறது.

இவ்வாறாகச் சுருக்கம் மற்றும் விரிவின் அனுபவம் மனத்தின் விளையாட்டு ஆகும். மனம் விரிவடையும் சுருங்கும். விரிவடையும் போது உண்மைக்கு அருகில் அது வருகிறது. உண்மைக்கு விரிவு இல்லை.

சரி, இன்னும் படிமுறை வளர்ச்சி அடைவதிலேயே இருக்கிறீர்களா? வாழ்த்துக்கள். (முற்றும்)

## மருத்துவக் குறிப்பு

வேப்பம் பூவை ஊறவைத்து குடிநீர் தயாரித்து காலையில் பருகிவர உடல் பெருக்கும், திருநீற்றுப் பச்சிலை முகர்ந்தால் தூக்கமின்மை தீரும்

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

திருமணம் செய்து கொண்ட இளம் தம்பதிகள் ஒருவரையொருவர் உள்ளன்புடன் நேசிக்க வேண்டும். மனைவியினுடைய குற்றத்தைக் கணவனும் கணவனுடைய குற்றத்தை மனைவியும் பூதக்கண்ணாடி போட்டு பார்க்கக்கூடாது. விட்டுக் கொடுப்பது என்ற உயர் குணம் ஒற்றுமைக்கு வழியாகும்.

குடும்பம் ஒரு தருவைப் போன்றது. அதற்கு வேர் மனைவி, அடிமரம் கணவன், கிளைகள் மக்கள், இலைகள் அன்பு, மலர்கள் கருணை, பழங்கள் தருமம். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

யாழ். பிரதேசத்தில் கலாசார மையம், யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம், கிறீன் கிராஸ் விடுதி, மணியந் தோட்டம் ஐஸ்தொழிற்சாலை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம், யாழ்ப்பாணம் புகையிரத நிலையம், யாழ். கேட், டான் டிவி, தொழில் திணைக்களம், யாழ்.நூலகம், இலங்கை தொலைத் தொடர்பு நிலையம் பண்ணை, எஸ்.டி எஸ். மருத்துவமனை, முதலாவது குறுக்குத் தெரு, மூன்றாவது குறுக்குத்தெரு, கொழும்புத்துறை, கோணாந்தோட்டம், எல்.ஐ.சி, மணியந்தோட்டம், வீரசிங்கம் மண்டபம், காய்கறிச் சந்தை (மருத்துவமனை வீதி), பாசையூர், பெரியகோவில், யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகம், புங்கங்குளம், உதயபுரம், காரைநகர், சீனோர்- படகுதுறை, காரைநகர் கடற்படைதளம், காரைநகர் கடற்படை முகாம், காரைநகர் இ.போ.ச. டிப்போ, களபூமி, தோப்புக்காடு, ஊரி ஆகிய இடங்களிலும்

கிளிநொச்சி பிரதேசத்தில் கல்மடுநகர், பெரியகுளம் ஆகிய இடங்களிலும்

வவுனியா பிரதேசத்தில் தாண்டிக்குளம் நீர்வழங்கல், யு.என்.எச்.சி.ஆர்-குருமன்காடு, அரசன் அரிசி ஆலை, ஆதிவிநாயகர் கோவிலடி, வைரவப்புளியங்குளம், பூந்தோட்டம் கல்வியியல் கல்லூரியடி, பூந்தோட்டம் தொழில் பேட்டை, பூந்தோட்டம் குருமன்காடு, காத்தார் சின்னக்குளம், மகாறம்பைக்குளம், மகாறம்பைக்குளம் (தாஸ்நகர்), புதிய பேருந்து நிலையம், தாண்டிக்குளம், வைரவபுளியங்குளம், குருக்கள் புதுக்குளம், மணியார்குளம், ஆண்டியப்புளியங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# பல யுத்த களங்களையும் ஆக்கிரமிப்புக்களையும் கண்ட ஆப்கானிஸ்தான்

07

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



1973 ஆம் ஆண்டில், மன்னர் இத்தாலியில் இருந்தபோது, தாவுத் கான் இரத்தமற்ற சதித் திட்டத்தைத் தொடங்கினார் மற்றும் முடியாட்சியை ஒழித்து ஆப்கானிஸ்தானின் முதல் ஜனாதிபதியானார். ஆயினும் தாவுத் (Daoud) கானும் அவரது மொத்த குடும்பமும் 1978 ஆம் ஆண்டில் கொலை செய்யப்பட்டனர். இக்கொலை இடதுசாரிகளான ஆப்கானிஸ்தான் மக்கள் ஜனநாயகக் கட்சியால் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது இக்குழுவினர் இராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். இது (Great Saur Revolution) மாபெரும் சார்புரட்சி என்று அறியப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானின் நீண்ட உறுதியான காலப்பகுதி என்றால் அது 1933 தொடக்கம் 1973 வரையான அரசர் சாகிர்ஷாவின் ஆட்சிக் காலமாகும். 1946 வரை அவரது மாமா பிரதமர் பதவியை வகித்தார். அவர் அரசர் நாதிர் ஷாவின் கொள்கைகளைத் தொடர்ந்தார். அவருக்குப் பதிலாக 1953 ஆம் ஆண்டில் அரசரின் மைத்துனரான முகமது தாவூத் கான் பிரதமர் பதவியேற்றார். 1964 அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது, முகமது தாவூத்கான் முதல் அரசரல்லாத பிரதமர் பதவியேற்றார். 1973இல் மன்னர் இத்தாலியில் இருந்தபோது, தாவூத்கான் இரத்த மற்ற சதிப் புரட்சியை நடத்தி முடியாட்சியை ஒழித்து ஆப்கானிஸ்தானின் முதல் ஜனாதிபதியானார். 1973இல் ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய குடியரசாக அறிவிக்கப்பட்டது.

### சவூர் புரட்சி(1978)

ஆப்கானிய முடியாட்சியின் கடைசி அரசரான முகம் மதுசகீர் சாவின் ஆட்சி 1933 முதல் 1973 வரை நடைபெற்றது. அந்தக் காலத்தின் அரசரின் ஒன்றுவிட்ட சகோதரரான முகம்மது தாவுத்கான் ஆப்கானிஸ்தானின் பிரதமராக நியமிக்கப்பட்டார். இவர் 1954 முதல் 1963 வரை அந்தப் பொறுப்பில் இருந்தார். 1964 இல் மன்னர் கொண்டு வந்த ஒரு அரசியல் சீர்திருத்தத்தை அடுத்து அரசின் மந்திரி சபையில் இருந்த அரசரின் அனைத்து உறவினர்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

தொடர்ந்த அரசின் செயற்பாடுகளால் அதிருப்தியடைந்த தாவுத், 1973 ஜூலை 17இல் அரசுக்கெதிரான ஒரு இராணுவப் புரட்சியை முன்னெடுத்ததன் மூலம் ஆட்சியைப் பிடித்தார். தொடர்ந்து முடியாட்சி முறையை ஆப்கானிஸ்தானிலிருந்து தடைசெய்த தாவுத், தன்னை அடுத்த ஜனாதிபதியாகவும் பிரகடனப்படுத்திக் கொண்டார். இவரது ஆட்சியில் ஆப்கானிஸ்தானை நவீனமயமாக்கும் திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டன. ஆனால் அரசாட்சியில் இவரது இரத்த சொந்தங்களின் ஆதிக்கம் அதிகம் இருந்தது.

ஆப்கான் இதுவரை தன் வரலாற்றில் கண்டதில் மிகச் சிறந்த ஆட்சியாளர் என்று தாவுத்கானைச் சொல்கிறார்கள். ஆப்கான் அரச பரம்பரையில் தன்னை ஒரு கம்யூனிஸ்டாக அறிவித்துக் கொண்ட அரசியல்வாதி இவர் தான். இவரின் அமைச்சரவையிலும் பல கம்யூனிஸ்ட்கள் சேர்ந்தார்கள் என்றாலும், ஒரேயடியாக இவர் ரஷ்யாவின் பக்கம் சாய்ந்து விடவில்லை. "அமெரிக்க சிகரெட்டை ரஷ்யத் தீப்பெட்டியால் பற்ற வைத்துப் புகைக்கும் போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்பது இவர் சொன்ன புகழ் பெற்ற வாசகம். இஸ்லாமிய நாடுகளுடன் ஒட்டி உறவாடி, எகிப்து போன்ற நாடுகளுடன் இவர் நல்லுறவு ஏற்படுத்திக் கொண்டது ரஷ்யாவுக்குப் பிடிக்கவில்லை. அமெரிக்காவின் பக்கம் ஆப்கான் சாய்ந்துவிடுமோ என ரஷ்ய கவலைப்பட்டது.

ஆப்கான் இதுவரை தன் வரலாற்றில் கண்டதில் மிகச் சிறந்த ஆட்சியாளர் என்று தாவுத்கானைச் சொல்கிறார்கள். ஆப்கான் அரச பரம்பரையில் தன்னை ஒரு கம்யூனிஸ்டாக அறிவித்துக் கொண்ட அரசியல்வாதி இவர் தான். சோவியத் ரஷ்யாவிலிருந்து ஆலோசகர்கள் வந்து இவருடன் இணைந்தார்கள்.


இவரின் அமைச்சரவையிலும் பல கம்யூனிஸ்ட்கள் சேர்ந்தார்கள் என்றாலும், ஒரேயடியாக இவர் ரஷ்யாவின் பக்கம் சாய்ந்து விடவில்லை. 'அமெரிக்க சிகரெட்டை ரஷ்யத் தீப்பெட்டியால் பற்றவைத்துப் புகைக்கும் போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்' என்பது இவர் சொன்ன புகழ் பெற்ற வாசகம். இஸ்லாமிய நாடுகளுடன் ஒட்டி உறவாடி, எகிப்து போன்ற நாடுகளுடன் இவர் நல்லுறவு ஏற்படுத்திக் கொண்டது ரஷ்யாவுக்குப் பிடிக்கவில்லை. அமெரிக்காவின் பக்கம் ஆப்கான் சாய்ந்து விடுமோ என ரஷ்யா கவலைப்பட்டது.

இவரது காலத்தில் தான் ஆப்கானிய மக்கள் ஜனநாயகக்கட்சி, ஆப்கானியர்களிடம் மிகுந்த செல்வாக்கைப் பெறத் தொடங்கியது. ஆப்கானிய மக்கள் ஜனநாயகக் கட்சியை சோவியத் ஆட்சியாளர்கள் வளைத்தனர். கம்யூனிச கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட இந்தக் கட்சி, தாவுத்கானின் குடும்ப ஆட்சிக்கு எதிராகப் போராடத் தொடங்கியது.


இதனிடையே அ க்கட்சியின் தலைவர்களுள் ஒருவரான மீர் அக்பர்கைபர் என்பவர் 1978 ஏப்ரல் 17 இல் படுகொலை செய்யப்பட்டார். இதையடுத்து தாவுத்துக்கு எதிரான போராட்டங்கள் சூடுபிடிக்கத் தொடங்கின. தொடர்ந்த கலகங்களை அடுத்து 1978 ஏப்ரல் 27இல் புரட்சிக் குழுவால் கைது செய்யப்பட்ட தாவுத்தும் அவரது குடும்பமும் படுகொலை செய்யப்பட்டனர்.

சவூர் புரட்சிஎன அழைக்கப்படும் இந்தக்கலகத்தை அடுத்து ஆப்கானிய குடியரசானது, ஆப்கானித்தான் ஜனநாயககுடியரசு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஆப்கானிய மக்கள் ஜனநாயகக்கட்சியின் தலைவரான நூர்முகம்மது தரக்கி, புரட்சிக் குழுவின் ஜனாதிபதியாகவும் ஆப்கானிஸ்தான் ஜனநாயக குடியரசின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். அமீனும் பாப்ராக்கர்மாலும் துணைப் பிரதமர்களாயினர்.

தாவுத் கானின் அரசாட்சியில் அவரது இரத்த சொந்தங்களின் ஆதிக்கம் அதிகம் இருந்தது. ஆப்கானிய மக்கள் ஜனநாயகக் கட்சி தாவுத் கானின்குடும்ப ஆட்சிக்கு எதிராகப் போராடத் தொடங்கியது. இதனிடையே அக்கட்சி ஆப்கானியர்களிடம் மிகுந்த செல்வாக்கைப் பெறத் தொடங்கியது. கம்யூனிச கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட இந்தக் கட்சியை சோவியத் ஆட்சியாளர்கள் தம்பக்கம் வளைத்து வைத்திருந்தனர். தாவுத்துக்கு எதிரான போராட்டங்கள் சூடுபிடிக்கத் தொடங்கின. தொடர்ந்த கலகங்களை அடுத்து 1978 ஏப்ரல் 27இல் புரட்சிக் குழுவால் கைது செய்யப்பட்ட தாவுத்தும் அவரது குடும்பமும் படுகொலை செய்யப்பட்டனர். இது சவூர் புரட்சி என அழைக்கப்பட்டது. ஆப்கானிய மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவரான நூர்முகம்மது தரக்கி, புரட்சிக்குழுவின் ஜனாதிபதியாகவும் ஆப்கானிஸ்தான் ஜனநாயக குடியரசின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். ஹபிசுல்லா அமீனும் பாப்ராக்கர்மாலும் துணைப் பிரதமர்களாயினர்.



ஜனாதிபதி தாவுத் கான்
1973-1978



நூர் முகம்மது தராக்கி
நாட்டின் தலைவர் 1978-79

### நூர்முகம்மது தரக்கியின் ஆட்சி(1978-1979)

சவூர் புரட்சியை அடுத்து அமைந்த நூர்முகம்மது தரக்கியின் ஆட்சி, ஆப்கானித்தானில் கம்யூனிச வாழ்வியல் முறையைக் கொண்டு வருவதில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியது.

சோவியத் ஒன்றியத்தை முன்மாதிரியாகக் கொண்டு நில பங்களிப்பு சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

திருமணச் சட்டங்கள் நவீனமயமாக்கப்பட்டன. மேலும் அரசால் முன்னெடுக்கப்பட்ட பல சீர்திருத்தங்கள், இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிராக இருந்தன.

இதையடுத்து அரசுக்கு எதிராகச் செயல்படத் தொடங்கிய பல அடிப்படை வாதிகள் மற்றும் மத குருமார்கள் நாடுகடத்தப்பட்டனர்.

சிலர் கொலை செய்யப்பட்டனர். இவை ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்களிடையே அதிருப்தியை தோற்றுவித்தது.

(தொடரும்...)

## நாட்டில்...

அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்று குறித்த தகவலை வெளியிட்டுள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் இதுவரையில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 12 ஆயிரத்து 906 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கோவிட்...

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து குறித்த குடும்பத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் வசிக்கும் 5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றில் ஒருவருக்கு கடந்த 21ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட துரித அன்டிஜன் பரிசோதனையில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த குடும்பம் வசித்து வந்த பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்திருந்த வீடு கடந்த 22ஆம் திகதி முதல் 14 நாட்களுக்கு சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும், சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்காது குறித்த குடும்பத்தினர் கோவிட் தொற்றாளருடன் இணைந்து வெளிநாட்டில் இருந்து வருகை தந்த தமது உறவினர்களுடன் சுற்றுலா சென்றுள்ளதாக சுகாதாரப் பிரிவினருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து, சுகாதாரப் பிரிவினர் அவர்களது வீட்டிற்கு சென்றிருந்தனர்.

அங்கு கோவிட் தொற்றாளர் மற்றும் அவருடன் இணைந்து தனிமைப்படுத்தப்பட்ட எவரும் இருக்கவில்லை.

இதனால், குறித்த குடும்பத்தினருக்கு எதிராக தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறை மீறலின் கீழ் பொலிஸார் ஊடாக வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த குடும்பத்தினர் தற்போது உள்ள பகுதியில் அவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-3,250)

## வவுனியாவில்...

வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு ஊடாக யாழ்.போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்துக்கு உயிரிழந்த ஐந்து பேரின் பிசிஆர் மாதிரிகள் அனுப்பப்பட்டிருந்தன.

அவற்றின் முடிவுகள் நேற்று வெளியாகியுள்ள நிலையில் உயிரிழந்த ஐவரில் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்த 66, 69, 78 வயதுடையவர்களே தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## நாடு இன்று...

கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதி முதல் நாட்டில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை இன்று 01 ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு நீக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் ஊரடங்கு இன்றுடன் தளர்த்தப்படுகின்றது.

எனினும் ஒவ்வொரு நாளும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணிவரை ஊரடங்கு நடைமுறையில் இருக்கும்.

கோவிட்-19 பரவலின் 3ஆம் அலையின் உக்கிரத்தை அடுத்து, கடந்த ஓகஸ்ட் 20ஆம் திகதி முதல் நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அபிவிருத்தி...

உத்தியோகத்தராகக் கடமையாற்றும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த மாணிக்கம் ஜெயக்குமார் (வயது 51) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 28ஆம் திகதி காலை 6.00 மணிக்கு வீட்டில் இருந்து நடைப் பயிற்சிக்காக சென்ற நிலையில் காணாமல் போயிருந்தார்.

இந்நிலையில் நவாலிப் பகுதியில் இருந்த கிணறொன்றில் இருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

(ம-3,18,33,104)

## இன்று முதல்..

செல்லத்துரை குலபாலச்செல்வன் தெரிவித்தார்.

அதன்படி வடபிராந்தியத்தில் 5 மாவட்டங்களுக்கு இடையேயும் பேருந்து சேவைகள் முன்னைய நேர அட்டவணையில் இடம்பெறும் என்று அவர் குறிப்பிட்டார்.

பயணிகள் சுகாதார நடைமுறைகளை உரியவாறு பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பிரதான முகாமையாளர் செல்லத்துரை குலபாலச்செல்வன் கேட்டுள்ளார்.

இதேவேளை, தனியார் பேருந்து சேவைகளும் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களுக்கு இடையேயும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-3,18,33)

## 38 நாள் சிசு...

சேர்ந்த செல்வவிநாயகர் அகிலகுமார் என்ற ஆண் சிசுவே உயிரிழந்ததாகும்.

மேற்படி சிசுவுக்கு மூக்கால் குருதி வடிவதாகத் தெரிவித்து நேற்று முன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது அது உயிரிழந்தது.

இது தொடர்பில் கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார்.

பிரேத பரிசோதனை நேற்று வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டபோது நுரையீரலில் கிருமித் தொற்று ஏற்பட்டு நிமோனியாக் காய்ச்சலால் சிசு உயிரிழந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,18,60)

## மாகாணங்...

சுகாதார வழிகாட்டல் சுற்றறிக்கையை சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்த்தன வெளியிட்டுள்ளார்.

நாட்டில் ஓகஸ்ட் 20ஆம் திகதி இரவு நடைமுறைக்கு வந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறை இன்று ஒக்ரோபர் முதலாம் திகதி அதிகாலை 4 மணிக்கு நீக்கப்படும் நிலையில் இந்த வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, தினமும் இரவு 10 மணி முதல் மறுநாள் அதிகாலை 4 மணிவரை தேவையற்ற பயணங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இன்று முதலாம் திகதி தொடக்கம் வரும் 15ஆம் திகதிவரை பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் ஒக்ரோபர் 16ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 31ஆம் திகதிவரை பின்பற்றவேண்டிய நடைமுறைகள் என இரண்டு பிரிவுகளாக சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

புதிய வழிகாட்டுதல்களின்படி தனிநபர்கள் வேலை, மருத்துவ தேவைகள் அல்லது அத்தியாவசிய பொருட்களை வாங்குதல் மற்றும் சேவைகளைப் பெறுவதற்கு மட்டுமே தங்கள் வீட்டை விட்டு வெளியேற முடியும்.

கூட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் 25 சதவீத திறன் மட்டுமே அனுமதிக்கப்படும். அதே நேரத்தில் இணையவழி சந்திப்புகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

விழாக்கள், விருந்துகள், உட்புற அல்லது வெளிப்புற கூட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படாது.

பொருளாதார மையங்களில் மொத்த வர்த்தகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் பொருளாதார மையங்கள் பிரிவு குழுக்கள் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் மேற்பார்வையில் செயற்பட முடியும்.

1 முதல் 15 வரை உணவகங்களில் உணவருந்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில் 16ஆம் திகதி முதல் 31ஆம் வரை இருக்கை வசதியில் 30 சதவீதம் அனுமதிக்கப்படும். அதிகபட்ச வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 50ஐ தாண்டாது இருக்கவேண்டும்.

இருப்பினும், திறந்தவெளியில் உணவு விநியோகம் ஊக்குவிக்கப்படுகிறது மற்றும் வளாகத்திற்குள் மது அருந்துவது தடைசெய்யப்படும்.

சுகாதார நடைமுறைகளின் அடிப்படையில் சலூன்கள் செயற்படலாம்.

கல்வி அமைச்சின் முடிவின் அடிப்படையில் 200க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்கும்போது செயற்பாடுகளை மீண்டும் தொடங்கலாம்.

இருப்பினும், வருகை தரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும் மற்றும் நடவடிக்கைகள் இணையவழியில் கூட்டாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

தனியார் கல்வி வகுப்புகள் மீண்டும் தொடங்க அனுமதி வழங்கப்படவில்லை.

15ஆம் திகதி வரை விளையாட்டு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்படாது. திரையரங்குகள் மூடப்படும்.

இன்று முதல் ஒக்ரோபர் 15ஆம் திகதி வரை இறுதிச் சடங்குகளில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஒரே நேரத்தில் 10 பேர் மட்டுமே பங்கேற்க முடியும். 24 மணி நேரத்தில் இறுதிச் சடங்கு நடத்தி முடிக்க வேண்டும்.

ஒக்ரோபர் 15ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 31ஆம் திகதிவரை இறுதிச் சடங்குகளில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி ஒரே நேரத்தில் 15 பேர் மட்டுமே பங்கேற்க முடியும். 24 மணிநேரத்தில் இறுதிச் சடங்கு நடத்தி முடிக்கவேண்டும்.

ஒக்ரோபர் 15ஆம் திகதிவரை பதிவுத் திருமண நிகழ்வுக்கு மட்டும் அனுதியளிக்கப்படுகிறது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மணமக்கள், உறவினர்கள், பதிவாளர் என 10 பேர் மட்டுமே பங்கேற்க முடியும்.

ஒக்ரோபர் 15ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரையான காலப்பகுதியில் திருமண நிகழ்வுக்கு இடவசதியில் 25 வீதமானோர் மட்டும் அனுமதியளிக்கப்படுகிறது. அதாவது 50 பேருக்கு அதிகரிக்காமல் இருத்தல் வேண்டும். (ம-3)

## வளர்ப்பு நாய்...

(வயது - 46) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த குடும்பஸ்தருக்கு கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு அவரது வீட்டிலுள்ள வளர்ப்பு நாய் கடித்துள்ளது. மறுநாள் அந்த நாய் உயிரிழந்துள்ளது. அதனை அவர் பொருட்படுத்தாது ஏற்பூசியும் செலுத்தாது இருந்துள்ளார்.

எனினும் கடந்த 28ஆம் திகதி குறித்த குடும்பஸ்தருக்கு நெஞ்சு அடைப்பு ஏற்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,60)

# துன்னாலையில் விபத்து; மூவர் படுகாயம்

(கரணவாய்)

துன்னாலை கலிகைச் சந்திக்கு அருகாமையில் நேற்று வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்ற விபத்து சம்பவத்தில் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முன்னால் சென்ற டிப்பர் வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட மோட்டார் சைக்கிள் டிப்பர் வாகனத்துடன் பின்னால் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-3,60)

## சுகாதார..

மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவரும் விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"முகக் கவசம் அணிதல், அடிக்கடி கைகளைக் கழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல் மற்றும் பொதுப்போக்குவரத்துகளை முடிந்தளவு தவிர்த்தல் உள்ளிட்ட சுகாதார வழிமுறைகளை நாட்டு மக்கள் தொடர்ந்தும் பின்பற்ற வேண்டும்.

பாடசாலைகளைத் திறப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டு வரும் நிலையில் இவ்வாறு மக்கள் பொறுப்புடன் செயற்பட்டால் மாத்திரமே பாடசாலைகளைத் திறக்க முடியும்.

அநேக வர்த்தக நிறுவனங்களுக்கு முன்பாகச் செய்யப்பட்டிருந்த கை கழுவுவதற்கான தண்ணீர் வசதிகள் தற்போது இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு அதற்கான ஏற்பாடுகள் காணப்பட்டாலும் அங்கு தண்ணீர் தடைப்பட்டுள்ளதையும் காண முடிகின்றது.

அதேவேளை, பல்வேறு கட்டுக்கதைகளை நம்பி சிலர் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளாமல் உள்ளமை தெரியவருகிறது.

எனவே தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றோம்" என்றார். (ம-3)

## தீக்காயங்களுக்...

சத்தியசீலன் தர்மசீலன் (வயது - 45) என்ற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் கடந்த 25ஆம் திகதி மோட்டார் சைக்கிள் திருத்தியபோது அவரது உடையில் பெற்றோல் பறந்துள்ளது. பின்னர் அவர் புகைப்பிடித்துள்ளார்.

புகைப்பிடித்துவிட்டு பீடியினை எறியும்போது அவரது உடையில் தவறுதலாக பட்டு தீக்காயங்களுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,60)

## வர்த்தகப் பிரிவுக்குரிய பிரத்தியேக வகுப்புக்கள்

366/8, 1 ஆம் ஒழுங்கை, இருபாலை வீதி, கோண்டாவில் (ஐயப்பன் கோவில் அருகில்)

A/L -2023 புதிய பிரிவு ZOOM ஊடாக ஆரம்பம்

ஆரம்பம் : 03.10.2021
ஞாயிறு பி.ப 3.00 மணி

பொருளியல் - S.ஜெயகுமார்
கணக்கீடு - A.T.சுரேன்
வணிகக் கல்வி - T.S.ரிஷி

(8053)

077 723 8597

## NEC A/L 2023 பிரிவு - 2

கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்

ஆரம்பம் : 02.10.2021 சனி
காலை 8 மணி

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

தற்போதைய நாட்டுச் சூழ்நிலை காரணமாக ZOOM மூலம் அனைத்து பாடமும் ஆரம்பத்திலிருந்து நடைபெறும்.

அலுவலகம் தினமும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை திறந்திருக்கும். (8377)

076 535 0999

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## தவறிவிட்டது

கைச் சங்கிலி ஒன்று கல்வியங்காடு சந்திக்கும் பரமேஸ்வரா சந்திக்கும் இடையில் 27.09.2021 (திங்கட்கிழமை) இரவு 7.30 - 8.30 மணிக்குள் தவறி விட்டது. கண்டு எடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

077 905 0185 (8376)

## D.C.M$_N$ - யாழ்.நகர்

( யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமை )

A/L 2023

ZOOM ஊடாக
ஆரம்பம் - 02.10.2021
காலை 9.00 மணி (சனிக்கிழமை)

கலை, வர்த்தக புதிய பிரிவு

**கலைப்பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்**

தமிழ் - வழமையான முன்னணி ஆசிரியர்
புவியியல் - P.S.V.தினேஸ்
இந்துநாகரிகம் - T.ஹரீஸ்
அரசியல் - பொன் சந்துரு
வரலாறு - S.S.Y. பிரதீபன்
அளவையியல் - T.T.நிதன்
ஊடகக் கல்வி - N.தீபன்
ICT - லவேந்திரன்
நாடகமும் அரங்கியலும் - M.ஜங்கரன்
கிறிஸ்தவ நாகரிகம் - J.J.வசந்தன்
விவசாய விஞ்ஞானம் - B.பாலசுதன்

**வர்த்தகப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்**

பொருளியல் - S.ஜெயக்குமார்
கணக்கீடு - S.தவா
வணிகக் கல்வி - N.S.கபில்

D.C.M$_N$ - நிர்வாகி
077 011 9434

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ( நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன் )

பரப்பு 6 இலட்சம்

பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

( தரகர் தேவையில்லை ) (8375)

077 814 7389 | 077 614 7333

## சதா பொன்ஸ் கல்வி நிலையம் - அல்வாய்

O/L மீட்டல் ZOOM ஊடாக வகுப்புக்கள் ஆரம்பம்

01.10.2021 வெள்ளி முதல்

எப்பாகத்தில் உள்ளவர்களும் இணைந்து கொள்ளலாம். (C-2718)

077 309 5176
077 925 0105
021 226 3206

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் - காரைநகர் வீதியில் ஓட்டுமடம் சந்தியில் இருந்து 500m தூரத்தில் 20 அடிப் பாதையுடன் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**இரண்டு பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.**

( யாழ். மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து 2Km தூரம் )

076 221 2037, 077 288 0152, 076 734 1023

## வேலையாட்கள் தேவை

கொடிகாமத்திலுள்ள உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

- கொத்து
- ரைஸ்
- ரொட்டி
- வெயிட்டர்

போன்ற வேலைகளிற்கு வேலையாட்கள் தேவை.
உணவு, தங்குமிட வசதி உண்டு.

தொடர்புகளுக்கு (8074)

077 397 0285

# பிறந்த மண்ணிற்கு பெருமை சேர்த்த பெருமகனார்

## அமரர் கந்தையா பழனிவேற்பிள்ளை

(ஓய்வுநிலை அதிபர் - கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை, உதவிக் கல்விப் பணிப்பாளர் - துணுக்காய் வலயம்)



**1941 - 2021**

அன்னை மடியில்
1941.10.18

ஆண்டவன் அடியில்
2021.09.01

மண்டைதீவு மண் பெற்ற மகத்தான மைந்தன்
மாசில்லா கல்வியை மகிழ்வோடு கற்றே திகழ்ந்தார்
சின்னஞ் சிறுவனாய் சிந்தை மகிழ
தந்தை வழி மாமியின் தாளாரு அன்பால்
தன் கல்வி தொடர ஆரம்பக் கல்வியை
கொக்குவில் C.C.T.M பாடசாலையிலும்
உயர் கல்வியை யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியிலும்
திறம்படக் கற்றே தேர்ந்தார் - அமரர் வாழ்வில்
ஆசிரியராய் மிளிர்ந்து, அதிபராய் மலர்ந்து
அதி உயர் உதவிக் கல்விப் பணிப்பாளராய் உயர்ந்து
உன்னதமான மாமனிதன் இன்று எம்மோடு இல்லை

மண்டைதீவு திருவெண்காட்டானில் தீராத பக்தி கொண்டவர்
வழிப் பிள்ளையார் நிர்வாக சபை உறுப்பினராய் திகழ்ந்து
சுற்றுப் புறத்தில் பூமரங்கள், நிழல்தரு மரங்கள் நாட்டி
பெருமையோடு பூரிப்படைந்த பெருமகனார்.
நிலையில்லா வாழ்வில் நிலையான புகழ் நாட்டி
விண்ணுலகு சென்று இன்று திங்கள் ஒன்று வந்ததுவே,
ஐயனே! பழனிவேல் அப்பனே! எந்தையே!
எமை ஆசீர்வதித்து அகிலத்தில் நாம் வாழ
நற்பாதை காட்டிட வேண்டி சமர்ப்பிக்கின்றோம்
இந் நினைவஞ்சலியை.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்புகலா பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மருமக்கள்.

(C-2720)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.